# நம்பிக்கை ஒளி
## Ray of Hope

நம்பிக்கை ஒளி
Ray of Hope

துவண்டோர் துயர் துடைத்து ஒளியேற்றுவோம்

March 2016 FREE NEWSPAPER இதழ் - 11



G05, Courtenay House, 10 Courtenay Road, East lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK
facebook.com/theroh.org www.theroh.org Email: roh@theroh.org Tel: (0044)2086179343 Mobile: 07853071088


## அடிப்படை வசதிகளின்றி வாழும் மேழிவனம் கிராம மக்கள்..!

02



யுத்தத்தில் பாதிக்கப்பட்ட விஜோஜன் குடும்பத்துக்கு 75,000/= பெறுமதியில் வாழ்வாதார உதவி...



15

வாழ்வாதாரத்துக்காக போராடும் தமிழீழ நீதிபதியின் குடும்பம்..!

03



## பாடசாலை காலை ஒன்று கூடலில் மயங்கி விழும் மாணவர்கள்..!

17



முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட கங்கேஸ்வரன் குடும்பத்துக்கு 105,000/= பெறுமதியில் வாழ்வாதார உதவி...

04



## மூன்று மகன்களை மாவீரர்களாக விதைத்த லோகநாயகி குடும்பத்துக்கு நம்பிக்கை ஒளியின் வாழ்வாதார உதவி

09



நம்பிக்கை ஒளியின் இல்ல மெய் வல்லுனர் திறனாய்வு போட்டி..!

13







# அடிப்படை வசதிகளின்றி வாழும் மேழிவனம் கிராம மக்கள்....

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பட்டமுறிப்பு கிராமசேவகர் பிரிவில் அமைந்திருக்கும் பூர்வீக கிராமமே மேழிவனம். இக்கிராமம் 1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இடம் பெற்ற இனக்கலவரத்தின் காரணமாக மலைநாட்டுப் பகுதியிலிருந்த இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் ஒட்டுசுட்டான் பகுதியை வந்தடைந்தனர். இவ்வாறு வந்தடைந்த மக்கள் காடுகளை வெட்டி குடியமர்ந்த கிராமமே இந்த மேழிவனம்.

இரண்டு பக்கங்களும் அடர்ந்த காடுகள், சேறுதாங்கிய பள்ளமும் திட்டியும் நிறைந்த வீதிகளையும் தாண்டி இலண்டன் நம்பிக்கை ஒளியின் இணை நிறுவனமாக இலங்கையில் செயற்பட்டு வரும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை பணியாளர்கள் இக் கிராமத்தின் கள நிலவரங்களை அறிந்து கொள்வதற்குச் சென்றிருந்தனர்.

1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட இக் கிராமம் 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் மாவீரர் ஒருவரின் நினைவாகவே மேழிவனம் என்ற பெயர் சூட்டப்பட்டது. இக் கிராமத்தில் தற்போது 32 குடும்பங்களே வசித்து வருகின்றனர். யுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் பல போராளிகளையும், மாவீரர்களையும் சுமந்த புனித பூமியாக திகழ்ந்தது.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலையில் இக் கிராம வாசிகள் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் தற்காலிக கூடாரங்களிலும், மரங்களுக்கு கீழும் பதுங்கு குழிகள் அமைத்தும் தங்கியிருந்தனர். கொடிய யுத்தத்தில் பல உயிர்களை காவு கொடுத்து மீதமாக இருந்த மக்கள் வவுனியா இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு, முட்கம்பி வேலிகளால் அமைக்கப்பட்ட முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். அப்போது அவர்கள் அனுபவித்த துன்பங்களை வார்த்தைகளால் கூற முடியாது.

உறவுகள், உடமைகள் என அனைத்தையும் இழந்த நிலையில் 2010ஆம் ஆண்டு மேழிவனம் கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்டனர். யானைகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த மேழிவனம் கிராமத்தில் குடியேறிய மக்கள் ஆரம்பத்திலிருந்து தற்போது வரை பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

மக்களின் குடிமனைக்குள் காட்டு யானைகள் புகுந்து விவசாய பயிர்கள் அனைத்தையும் நாசம் செய்தும், காவல் காக்கும் விவசாயிகளையும், யானை தாக்கிய சம்பவங்களும் இக் கிராமத்தில் பதிவாகியுள்ளது.

வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டாலும் இவர்களின் அடிப்படை தேவையான போக்குவரத்து, மற்றும் பாடசாலை மாணவர்களில் கல்வி, வாழ்வாதாரம் போன்ற பல தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது சவால்களுக்கு முகங்கொடுத்தே இக் கிராம வாசிகள் வாழ்ந்து வருகின்றனர். பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் காடுகள் அபாயமான பாதையூடாக சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே தமது கல்வியைத் தொடர்கின்றனர். குறித்த கிராமத்தில் பல பிரச்சினைகள் இருந்தாலும் இங்கு வாழும் பாடசாலை மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்குடன் மாலைநேர கற்றல் நிலையம் ஒன்று அமைத்து, அதனூடாக சிறுவர்களின் கல்வி தரத்தை உயர்த்தவேண்டுமென்பதே ஒட்டு மொத்த கிராம மக்களின் எதிர்பார்ப்பு.











# வாழ்வாதாரத்துக்காக போராடும் தமிழீழ நீதிபதியின் குடும்பம்..!

வந்தாரை வாழவைக்கும் வன்னி மண்ணில் இன்னமும் பல்வேறு குடும்பங்கள் தாங்கள் வாழ வழியற்று நிர்க்கதியாகி நிற்பதை காணமுடிகிறது. சுய மரியாதையுடன் வாழ சுய தொழில் ஒன்றை ஏற்படுத்தி தர யாராவது முன்வருவார்களா? என்கின்ற ஏக்கம் அந்தக் குடும்பங்கள் மத்தியில் நிறையவே நிறைந்திருக்கிறது.

போராட்ட காலத்தில் பல களங்கண்டு, பல்வேறு வகையிலும் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு உதவியவர்களே இன்று அனைவராலும் கைவிடப்பட்டு பரிதவிக்கின்ற ஒருநிலைக்கு தள்ளப்பட்டிருப்பதைப் பார்க்கும் போது வேதனையைத் தவிர வேறொன்றுமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நீதிமன்றத்து நீதிபதியாக கடமையாற்றியவர்களுள் சித்திரவேல் முரளிதரனும் ஒருவர். இவருடைய மனைவி தான் விக்னேஸ்வரி. இவர்கள் இருவருக்கும் ஒருமகன் உண்டு. அவனது பெயர் கபிலன். இரண்டாம் வட்டாரம், கோம்பாவில் பகுதியில் வசித்து வந்த இவர்கள் யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து தேவிபுரத்திற்குச் சென்றனர். எறிகணைகள் என்றாவது பேதங்கள் பார்த்ததுண்டா? பச்சிளம் குழந்தைகள், முதியவர்கள், வாலிபர்கள், போராளிகள், நீதிபதிகள், பொறுப்பாளர்கள் என அனைவரும் கொல்லப்படுவது யுத்தகாலத்தில் பழகிப் போயிருந்தது.

2009ஆம் ஆண்டின் முதல் மாத நடுப்பகுதி கடந்து கொண்டிருந்தது. தேவிபுரமும் அதனைச் சூழவும் கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுக் கொண்டிருந்தன. இதன் போதுதான் 2009.01.18 அன்று சித்திரவேல் முரளிதரன் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொள்கின்றார். பல்வேறு பிணக்குகளையும் தீர்த்து, வழக்குகளை நிலுவையில் வைக்காமல் சிறந்த ஓர் நீதிபதியாக கடமையாற்றிய முரளிதரனின் உயிர் ஈழதேசத்திலேயே பிரிந்தது. முரளிதரனின் இழப்பைத் தாங்க இயலாது அவரது மனைவியும் மகனும் துடிதுடித்துப்போயினர். இருந்தும் என்னசெய்வது? இது விதியா..? இல்லை சதியா..? என ஏங்கிக் கொண்டு தொடர்ந்தும் பயணித்தனர்.



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் நீதிமன்றத்து நீதிபதியாக கடமையாற்றிய சித்திரவேல் முரளிதரனின் குடும்பத்தின் தற்போதய நிலை..!

மீண்டும் இடம் பெயர்ந்து வலைஞர்மடத்தில் விக்னேஸ்வரியும் அவரது மகனும் குடியிருந்தனர். அங்கும் எறிகணைத் தாக்குதல் உக்கிரம் பெற்றிருந்தது. இப்போது, அதாவது 2009.03.29 அன்று விக்னேஸ்வரியும் அவரது மகன் கபிலனும் படுகாயமடைந்தனர். இதனால் கப்பல் மூலம் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் அழைத்துவரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பெற்றபின் செட்டிக்குளம் இடைத்தங்கல் முகாமில் தங்க அனுமதிக்கப்பட்டனர். சிலகாலம் முகாமிலேயே வாழ்க்கை ஓடியது. பின்னர் மீள்குடியேற்றம் செய்ய அனுமதிக்கப்படவே தமது சொந்த ஊருக்கு வந்து குடியேறினார்கள். வறுமையின் கோரப்பிடி இவர்களையும் இறுக பற்றிக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதிபதியாக கடமையாற்றியவரின் குடும்பம் தற்போது வயிற்றுப் பசியை போக்குவதற்குக் கூட நாதியற்று கிடக்கும் அவலம் தொடர்ந்தது.

இந் நிலையை அறிந்த இலண்டன், நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் அதன் இணை நிறுவனமாக தாயகத்தில் செயற்படும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையினூடாக முழுமையான விபரங்களைத் திரட்டி வாழ்வாதாரம் செய்வதற்கு ஒழுங்குபடுத்துமாறு பணித்திருந்தது.




இதற்கு அமைவாக இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை சேவையாளர்கள் சித்திரவேல் முரளிதரன் வீட்டுக்கு நேரடியாகச் சென்று குடும்ப நிலவரங்கள் தொடர்பாக அறிந்து கொண்டனர். இந்திய அரசினால் கட்டிக் கொடுக்கப்பட்ட பூரணப்படுத்தப்படாத வீட்டின் விறாந்தையில் தமிழீழ நீதிபதியின் மனைவியும், மகனும் செத்தல்மிளகாய் உடைத்துக் கொண்டிருந்தனர். இந் நிலையில், இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் பணியாளர்கள் தங்களை அறிமுகப்படுத்தி வீட்டு குறித்த குடும்பத்தின் தற்போதைய வாழ்க்கை முறை தொடர்பாக வினவினார்கள். சித்திரவேல் முரளிதரனின் மனைவி அன்றாடம் உணவுத்தேவைக்காகவும் மகனின் கல்விக்காகவும் உழைத்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் வீட்டில் செத்தல் மிளகாய் வாங்கி அவற்றுக்குரிய சரக்கு பொருட்களையும் சேர்த்து வறுத்து நாளாந்தம் 3 கிலோ மிளகாய்த் தூள் திரித்து சிறிய பெட்டிக் கடைகளுக்கு கெண்டு சென்று, விற்று அதில் ஈட்டப்படும் சிறிய வருமானத்தில் தனது வாழ்க்கைச் செலவை கொண்டு செல்வதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை இவரின் மகன் கபிலன் மிகவும் கெட்டிக்காரன். எதிர்கால இலட்சியம் என்ன என்ற கேள்விக்கு பதில் கூறிய கபிலன், தனது தந்தையைப் போல தானும் ஒரு நீதிபதியாக வரவேண்டும் அதற்காக கடினமாக கல்வி கற்பதாக கூறினான். இவ்வாறு இலட்சியத்துடன் வாழும் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தலையாய கடமையாகும். இதன் படி இலண்டன், நம்பிக்கை ஒளி மூலம் நீதிபதியின் மனைவி விக்னேஸ்வரி தற்போது செய்யும் கைத்தொழிலை மேம்படுத்தி நாளாந்தம் 600 ரூபாய் தொடக்கம் 1000 ரூபாய் வரை வருமானம் பெற்றுக் கொள்ளும் வகையில் வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்த உதவி மூலம் விக்கினேஸ்வரி மேலதிகமாக பெருட்களை கொள்வனவு செய்து, மிளகாய்த் தூள், மஞ்சள்தூள், சரக்குத்தூள், போன்ற தூள் வகைகளை தயாரித்து கடைகளில் விற்பனை செய்து வருகின்றார். இவற்றின் மூலம் தனது குடும்பச் செலவையும் மகனின் கல்விச் செலவையும் ஈடு செய்ய முடிவதாக விக்னேஸ்வரி கண்களில் நீர் சொரிய இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்துக்கு தனது குடும்பம் சார்ந்த நன்றிகளை தெரிவித்தார்.





# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட கங்கேஸ்வரன் குடும்பத்துக்கு ஒரு இலட்சத்து 5000 ரூபாய் பெறுமதியில் வாழ்வாதார உதவி..!

தமிழீழ விடுதலை போராட்டத்தில் தமது பங்கினை வகித்தவர்களில் பெரும்பாலானவர்கள் வடபகுதியில் இருந்தாலும் அதே அளவு ஆதரவு கிழக்கிலும் இருந்தது என்பதை எவராலும் மறுக்க முடியாது. நேரடியாகவும் சரி, மறைமுகமாகவும் சரி பலர் தமது உயிர்களைப் பணயம் வைத்து ஈழவிடுதலை போராட்டத்தில் பங்குபற்றியிருந்தார்கள். அதில் பலர் வித்தாகியிருக்கிறார்கள். சிலர் வேரறுந்த மரமாகியிருக்கிறார்கள். அப்படியானவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டியது தமிழ் மக்களின் கடமை. இல்லாவிட்டால் ஒரேயடியாக அவர்கள் வீழ்ந்து விடுவார்கள். புலம்பெயர் தமிழர்களின் உதவி இப்படியானவர்கள் வீழ்வதற்கு முன்னர் அவர்களைத் தாங்க உதவ வேண்டியது அவசியமானது.

மட்டக்களப்பு, சித்தாண்டியில் பிறந்து அங்கிருந்து விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றியவர்களுள் கங்கேஸ்வரனும் ஒருவர். 1994 ஆம் ஆண்டு தொடக்கம் விடுதலைப் புலிகள் அமைப்போடு சேர்ந்தே இவர் இயங்கினார். 2007ஆம் ஆண்டில் வன்னிக்குள் பிரவேசித்து நேரடியான பங்கினை வகிக்கத் தொடங்கினார். அதே காலப்பகுதியிலேயே விஜிதா என்பவரைத் திருமணம் முடித்துக் கொண்டாலும், தொடர்ந்தும் விடுதலைப் புலி போராளியாகவே இருந்து வந்துள்ளார். கணேசபுரம், கிளிநொச்சியில் வசித்த இவர்கள் இடப்பெயர்வின் நிலைக்குத் தள்ளப்படவே தேவிபுரம், புதுக்குடியிருப்பு, மந்துவில், செந்தூரன் சிலையடி (இரணைப்பாலை), என நகர்ந்து இறுதியில் வலைஞர்மடம், இரட்டைப் பனையடியில் நிலை கொண்டனர். இவர்களுக்கு 2008.03.19 அன்று ஓர் ஆண் மகனும் பிறந்தான். கைக்குழந்தையுடன் தான் இடப்பெயர்வும் நகர்ந்தது.

கங்கேஸ்வரன், ஆனந்தபுரத்தில் களப்பணி ஆற்றிக் கொண்டிருந்த வேளை இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் முதுகுப் பக்கமாக படுகாயமடைந்தார். இதனால் செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் மூலம் புல்மோட்டைக்கு அழைத்து வரப்பட்டார் கங்கேஸ்வரன். கூடவே அவரது மனைவியும் மகனும் பராமரிப்பு காரணங்களுக்காக அழைத்து வரப்பட்டார்கள். புல்மோட்டைக்கு



வந்தடைந்த அவர்களை பதவியா இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்கள்.

அங்கிருந்து பதவியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு இரண்டு வாரங்கள் சிகிச்சையளிக்கப்பட்டது. பின்னர், குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, முள்ளந்தண்டில் காணப்படுகின்ற ஷெல் துகள்கள் அதிக வேதனையைத் தரவே அழுதபடி படுக்கையாகினார்.

அவரது மனைவியாலும் இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் சத்திர சிகிச்சை மூலம் ஷெல் துகள்களை அகற்றுவதற்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு இடம்பெற்ற சத்திர சிகிச்சையின் பின்னர் 1, 1/2 மாதங்கள் தங்கி சிகிச்சை பெற்ற பிற்பாடு மீண்டும் குருநாகல் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மன்னார் ஆயர் இவர்களைப் பொறுப்பெடுத்து மன்னருக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒன்பது மாதங்கள் வரை தங்கியிருந்து 2015 ஜனவரி மாதத்தில் தனது சொந்த ஊரான மட்டக்களப்பு, சித்தாண்டி, மரவடிவேம்புக்குச் சென்று குடியேறினார்கள். தனது இயலாமையை எண்ணி தினம் தினம் தவிக்கும் கங்கேஸ்வரனால் வாழ்க்கைச் சுமையையும் தாங்க இயலவில்லை. மகனும் பள்ளி செல்ல ஆரம்பித்ததைத் தொடர்ந்து செலவுகள் மேலும் அதிகமாயின.

இதனையடுத்து இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் ஊடாக இலண்டன், நம்பிக்கை ஒளியின் சேவைகளை அறிந்து தனது நிலையை விபரித்து உதவி கோரியிருந்தார். வீட்டில் இருந்தபடியே கோழி வளர்ப்பதற்கான ஓர் உதவியை எதிர்பார்த்தார். அவரின் விபரங்களை உறுதிசெய்த இலண்டன், நம்பிக்கை ஒளி, இணைக்கும் இதயங்கள் ஊடாக ரூபாய் ஒரு இலட்சத்து 5000 ரூபாய் உதவித்தொகையை அவருக்கு வழங்க முன்வந்தது. இதில் கோழிக்கூடு தயாரித்தல், அதற்குரிய கூலி, கோழிக்குஞ்சு மற்றும் கோழி வாங்குதல், கோழிகளுக்குரிய தீனி வாங்குதல் என அனைத்துமே அடங்கியிருந்தது. எனவே குறித்த தொகையை அவருக்கு வழங்கிய இலண்டன், நம்பிக்கை ஒளி அவர்கள் வாழ்விலும் ஓர் நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது.

தற்போது கோழிகளுடன் தனது பொழுதினைக் கழித்துவரும் கங்கேஸ்வரன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றார். இந்த மகிழ்ச்சி தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்பதே இலண்டன், நம்பிக்கை ஒளியின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.



**நம்பிக்கை ஒளியின் சிறப்பு பக்கம்**

ஈழத்தின் பெருமைகளையும் வரலாறுகளையும் சுட்டி நிற்கும் வரலாற்று தடங்களை அலசி ஆராயும் விசேட வரலாறுகள் சுமக்கும் இந்த பக்கம் வெறு-மனே இந்து சமயம் மட்டுமன்றி தமிழின் பூர்வீக வரலாற்றை சுட்டி நிற்கும் ஆலயங்களின் வரலாறுகள் இந்த புதிய பக்கத்தில் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்படும் என்பதனை வாசகர்களுக்கு பெருமையுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

**நம்பிக்கை ஒளி செய்திப்பிரிவு**



# திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் வரலாறு.

புராதன இலங்கையின் சிறப்பு வாய்ந்த பஞ்ச ஈச்சரங்கள் என எல்லோராலும் அழைக்கப்படும் ஐந்து சிவன் திருக்கோயில்களில் திருக்கேதீஸ்வரமும் ஒன்றாகும்.

இத் திருக்கோயில் புராண, மற்றும் இதிகாச காலத்து வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டது. இந்து சமயத்தின் உலகமகா இதிகாசமான இராமாயணம் மற்றும் முருகப் பெருமானின் பெருமைகளையும், வரலாற்றுச் சிறப்புகளையும் கூறும் "ஸ்கந்த புராணம்" "தமிழில் கந்த புராணம்" -என்ற புராண நூலிலும் இலங்கைத் தீவின் அழகும், அத்தீவில் நிலவிய சிவ வழிபாடும், மக்களின் வாழ்க்கை முறைகளும் சிறந்த முறையில் எடுத்தியம்பப்படுகின்றன.

இராமாயணக் கதை இலங்கைத் தீவு பற்றிக் குறிப்பிடும் உண்மைகளைப் பார்ப்போம்:

திருக்கேதீஸ்வரத் திருக்கோயில் இராமாயண காவியத்திலேயே சிறந்த முறையில் குறிப்பிடப்படுகின்றது.

இராவணனின் மனைவியர் பலர். அவர்களுள், பேரழகு மிக்கவளும் , பட்டத்து ராணியாக விளங்கியவளுமான மண்டோதரி சிறந்த கற்புக்கரசி. இவள் மாயன் என்ற சிற்றரசனின் மகள். மாயன் ஆட்சி செய்த இடத்தின் பெயர் மாதோட்டம் என்ற மாந்தை.

மண்டோதரி சிறந்த சிவபக்தை என்பதும், அவள் மாதோட்டத்தில் இருந்த திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் சிவபெருமானை வழிபாடு செய்ததையும் பண்டைய இதிகாசங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் பிருகு என்ற மகாமுனிவர் சிவபெருமா-னை வழிபட்டதை "மகா முனிவர்கள் வரலாறு" நமக்கு எடுத்துரைக்கின்றது.

நவக்கிரகங்களில் ஒருவரான கேது பகவான் இத் திருக்கோயிலில் சிவபெருமானை வழிபட்டுத் தமது சாபம் நீங்கப்பெற்றார் என்று "தக்சிண கைலாச மான்மியம்" என்ற பண்டைய வரலாற்று நூல் கூறுகின்றது. கேது பகவான் பக்தியுடன் பூசித்ததாலேயே இத் திருக்கோயிலுக்குத் "திருக்கேதீஸ்வரம்" என்னும் பெயர் உண்டாயிற்று.

திருக்கேதீஸ்வரம் இந்து மதத்தின் மிகப் பெரிய புராண நூலான "ஸ்கந்த புராணத்தில்" மூன்று அத்தியாயங்களில் இலங்கையைப் பற்றியும், அத்தீவின் அழகைப் பற்றியும் அங்கே வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளை பற்றியும் விளக்கிவிட்டு, இலங்கையின் முக்கியமான இரண்டு புராதனமான சிவன் திருக்கோயில்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றின் தோற்றத்தைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கின்றது.

அப் புராணத்தின் ப்டி, முன்னொரு காலத்தில், வாயுதேவனுக்கும், ஆதிசேடனுக்கும் யுத்தம் மூண்டபோது, ஆதிசேடனைத் தாக்குவதற்காக வாயுதேவன் மகா மேரு மலையின் சிகரங்களில் மூன்றை எடுத்து வீசினார். அந்தச் சிகரங்களில் இரண்டு இலங்கைத் தீவில் வீழ்ந்தன. ஒன்று திருக்கேதீஸ்வரமாகியது.

மற்றொன்று, திருக்கோணேஸ்வரமா கியது. மகா மேரு மலை இறைவன் உறையும் புனிதமான மலையாகையால், சிவபெருமான் இத் திருத்தலங்களையும் தமது உறைவிடங்களாக்கிக் கொண்டார். ஆகையால், மகா மேரு மலையின் புனிதத்துவமும், பெருமையும் திருக்கேதீஸ்வரத் தலத்துக்கும் உள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புகள் "தக்சிண கைலாச மான்மியம்" என்ற பண்டைய தமிழ் வரலாற்று நூலிலும் விளக்கப்பட்டுள்ளது.

புராண காலத்தைக் கடந்து வரும்போது, அடுத்ததாக, சைவ சமயத்தின் சமய குரவர்களான திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் ஏழாம் நூற்றாண்டிலும், சுந்தர மூர்த்தி நாயனார் எட்டாம் நூற்றாண்டிலும் இந்தத் திருக்கோயிலுக்கு வருகை தந்து இத் திருக்கோயிலில் உறையும் திருக்கேதீஸ்வரரின் சிறப்பைப் பற்றியும், அதன் அருகே அமைந்துள்ள புனி-தமான பாலாவித் தீர்த்தத்தின் மகிமை-களைப் பற்றியும் தமது தேவாரங்களில் பாடியுள்ளார்கள்.

இந்தியாவிலும், இலங்கையிலும் அமைந்துள்ள 275 தேவாரப் பாடல் பெற்ற சிறப்புத் தலங்களுள் இத் திருக்கோயிலும் ஒன்றாகும். ஈழத்திலுள்ள சிவன் கோயில்களுள், திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் மட்டுமே இவ்வாறு பாடல்பெற்ற தலங்களாக விளங்குவது இவற்றின் தனிச் சிறப்பாகும்.

திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் இலங்கையில் மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகருக்கு ஏழு மைல் தொலை-லவில், மாதோட்டம் என்ற புராதனமான துறைமுக நகரத்தில் அமைந்துள்ளது.

பண்டைக் காலத்தில் இத் திருக்கோயிலும், மாந்தை என்று அழைக்கப்படும் மாதோட்டத் துறைமு-கமும் உலகப் புகழ் பெற்று விளங்கின.

மாதோட்டத் துறைமுகம் மூக்கியமான வியாபாரத் துறைமு-கமாக விளங்கியது. கிரேக்கர்களும், ரோமானியர்களும், அராபியர்களும், எத்தியோப்பியர்களும், பெர்சியர்களும், சீனர்களும், ஜப்பானியர்களும் மற்றும் பர்மியர்களும் கடல் கடந்து இத் துறைமுகத்துக்கு கப்பல்களில் வந்திறங்கினார்கள். இலங்கையிலிருந்து வியாபாரப் பொருட்களை வாங்கிச் சென்றார்கள்.

பிற்பட்ட காலகட்டத்தில், இலங்கையைப் போர்த்துக்கேயர்கள் கைப்பற்றிய போது, அவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகவும், இந்துத் திருக்கோயில்களில் நிறைந்திருந்த செல்வங்களைக் கொள்ளையடிப்பதற்காகவும் இந்துக் கோயில்கள் அனைத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்.

அவ்வாறே, திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலும் 1505 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டது.

அந்தத் திருக்கோயிலின் அழகும், வலிமையும் வாய்ந்த கருங்கற்கள் மன்னார் கோட்டையையும், ஊர்காவற்றுறை கடற்கோட்டையையும் மற்றும் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தையும் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டன. அப்போது திருக்கோயிலிலிருந்த செல்வங்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன. ஏரா-ளமானோர் கொல்லப்பட்டனர்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு பின்னர், புராதனமான இத் திருக்கோயிலின் இடிபாடுகளில் மீதமிருந்த பொருட்கள் 1894 ஆம் ஆண்டு நிகழ்ந்த புதைபொருள் ஆராய்வின் போது கிடைக்கப்பெற்றன. அந்த ஆராய்ச்சியின் போது, திருக்கேதீஸ்வரப் பெருமானின் சிவலிங்கமும் மேலும் பல வழிபாட்டுத் திருவுருவங்களும் கூட இறைவனரு-ளால் கிடைக்கப் பெற்றன.

அன்றிலிருந்து, இத் திருக்கோயிலை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஆவல் ஈழத்துச் சைவப் பெருமக்கள் மனங்களில் உதயமானது. ஆயினும், ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்குப்பின்னரே அம்முயற்சி கைகூடியது.

ஆம், சைவ சமயம் தழைத்தோங்கப் பல வழிக-ளிலும் பாடுபட்ட ஆறுமுக நாவலர் அவர்களின் அருமுயற்சியாலும், ஈழத்துச் சைவப் பெருமக்களின் ஒன்றுசேர்ந்த உழைப்பாலும் 1910 ஆம் ஆண்டில் இத் திருக்கோயில் புதிய பொலிவுடன் சிவாகம விதிகளுக்கு இணங்க மீண்டும் கட்டப்பட்டது.

பாலாவிப் புனித தீர்த்தக் குளமும் புதுப்பிக்கப்பட்டது.

1952 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் குடமுழுக்கு (கும்பாபி சேகம்) செய்யப்பட்டது. மேலும் சில அகழ்வாராய்ச்சிகளின் பின்னர், இத் திருக்கோயிலில் மீண்டும் 1976 ஆம் ஆண்டு ஜூ லை மாதம் நான்காம் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

பண்டைய அழகுத் திருக்கோயில் தற்போது இல்லையென்றாலும், சிவா-கம விதிகளுக்கு இணங்கவும், திராவிடச் சிற்பக்கலை முறைகளுக்கிணங்கவும் தற்போதுள்ள திருக்கோயில் அழகும் சிறப்பும் ஒருங்கே அமையும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

ஈழத் திருநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இத் திருக்கோயிலில் இறைவனை வழிபடுவதற்காக மக்கள் கூடி வருகின்றார்கள். மகா சிவராத்திரி விழா இத் திருக்கோயிலில் வெகு விமர்சையாக வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

# வாழ்வதற்காக போராடும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளி குடும்பம்



காலங்கள் பல கடந்தும் நடந்த யுத்தத்தின் சத்தம் இப்போது சற்று ஓய்ந்திருக்கிறது. ஆனாலும் விடுதலை வேட்கை தமிழ் நெஞ்சங்களில் இருந்து இன்னமும் ஓயவில்லை. இறுதிக்கட்ட யுத்தமே அனேகரை இழக்க வைத்ததுமட்டுமல்லாமல் இயங்காத நிலைக்கும் எமது உறவுகளை மாற்றியது. இருந்தும் இதற்கு முன்னர் நடந்த சமர்களிலும் சாதித்த பலர் கழுத்துக்கு கீழும், இடுப்புக்கு கீழும் இயங்காத நிலையில் அன்றும் அதற்கு பிற்பாடு இடம்பெற்ற சமர்களிற்குள்ளும் முகம் கொடுத்து பல்வேறு இன்னல்களை அனுபவித்திருக்கிறார்கள். அன்று அவர்களைத் தாங்கிய அந்த உறவுகள் தான் இன்றும் அவர்களுக்கு தெய்வமாகத் தோன்றுவார்கள்.

அப்போதே இயங்காத நிலையில் இருந்த எமது உறவுகள் செல் மழையிலும், குண்டு மழையிலும் சற்றும் தளராத மனதோடு உறுதியோடு இருந்திருக்கிறார்கள். ஓரிடத்தில் அப்போது யாருமே இருக்க முடியாது. வலுவிழந்தவர்களை பாதுக்கக்கச் சென்றவர்களும் மண்ணோடு மண்ணான வரலாறும் எம் மண்ணில் தான் எழுதப்பட்டிருக்கிறது. வலுவிழந்த நிலையிலும் யுத்தத்தின் காரணமாக இடப்பெயர்வுகளைச் சந்தித்து பல்வேறு துன்பங்களையும் அனுபவித்தவர்கள் எம்மவர்களில் ஏராளம் எனலாம். அப்படியான ஒருவர்தான் ஜோர்ச் கிருஸ்துராசா. 2007ம் ஆண்டிலேயே காயப்பட்டு இரண்டு வருடங்கள் யுத்த வலயத்துக்குள் படுத்த படுக்கையாக வலம் வந்தார்.

விநாயகர் வீதி, வித்தியாபுரம், ஒட்டுசுட்டானை சொந்த இடமாகக் கொண்டவர் தான் கிருஸ்துராசா. 1998ம் ஆண்டிலேயே சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு களுத்துறை மற்றும் பூசா சிறைகளில் இரண்டரை ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் வவுனியா நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் விடுவிக்கப்பட்டார். பின்னர் காலத்தின் கட்டாயத்தின் பெயரில் மணலாற்றுப் பகுதிக்கு பணிக்குச் செல்ல வேண்டிய நிலை உருவாகின்றது. மணலாற்றில் வைத்து 2007.05.27 அன்று இராணுவத்தின் தாக்குதலில் காயமடைகின்றார் கிருஸ்துராசா. ஏ.கே ரவை முள்ளந்தண்டு பகுதியை நன்றாக குறிவைத்து பதம் பார்த்திருந்தது. உடனடியாக களப்பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டு, அதன்பின் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றார் கிருஸ்துராசா.

வவுனியாவிலும் போதுமான சிகிச்சைகள் இன்மையால் அங்கிருந்து அநுராதபுரம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு 11 நாட்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றதன் பின்னர் மயக்க நிலை ஏற்படுகின்றது கிருஸ்துராசாவுக்கு. இதன்போது கை சற்று இழுத்திடவே வெளி மருந்துகள் வங்கி, சிகிச்சை மேற்கொள்ளப்ப் படுகின்றது. அப்போது இவருடைய குழந்தைக்கு 3. 1/2 வயது. தனது தாயாருடன் விட்டுவிட்டு மனைவியை தனது பராமரிப்புக்காக அழைத்து வந்திருந்தார். எனினும் தேசிய அடையாள அட்டை இல்லாததால் கொழும்புவரை அழைத்துச் செல்ல முடியவில்லை. வவுனியாவுடன் மனைவியின் பராமரிப்பு கை கூடாத நிலையை அடைந்ததும் வருத்தம் தான்.

கொழும்பு வைத்தியசாலையில் இருந்து மீண்டும் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மீண்டும் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றார். அங்கு பராமரிப்பாளர்களால் தன்னை ஒரு குழந்தை போன்று மிகவும் அன்பாக பண்பாக நடத்தினார்கள் என தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மாஞ்சோலையில் மூன்று மாதங்கள் சிகிச்சை பெற்ற பின்னர் தனது சொந்த வீட்டுக்கு தனது விருப்பத்தின் பெயரில் வருகின்றார் கிருஸ்துராசா.

இவர்கள் ஒட்டுசுட்டானில் வசித்துக் கொண்டிருக்கும் போது இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரமடைந்தது. தமது சொந்த ஊரிலிருந்து இடம்பெயர்ந்து மூங்கிலாறு, இருட்டுமடு, இரணைப்பாலை வரை சென்று இறுதியில் அம்பலவன் பொக்கணையில் குடியேறினார்கள். ஏற்கனவே சிகிச்சை பெற்றதன் போது Dr.வரதன் மேற்பார்வை செய்ததால் கிருஸ்துராசாவின் நிலைமையை புரிந்து கொண்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் அனுப்ப அனுமதியளித்தார். அங்கிருந்து 2009.03.28 அன்று கப்பல் மூலம் புல்மோட்டை வந்தடைந்தார்கள் கிருஸ்துராசாவின் குடும்பம்.

புல்மோட்டையில் வைத்து ஆளொரு பக்கமாக பிரிக்கப்பட்டார்கள். பின்னர் கிருஸ்துராசாவின் நிலையை கருத்தில் கொண்டு மனைவியும் பிள்ளையும் இணைக்கப்படுகிறார்கள். பின்னர் பதவிய இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கும் இரண்டு வாரங்கள் தங்கியிருந்த பிறகு அருணாச்சலம் 8ம் யுனிற்றில் குடியமர்த்தப்படுகின்றார்கள். செட்டிக்குளம் முகாமிலும் சில காலம் சென்றது. அதன் பிறகு 2010.02.22 அன்று மீண்டும் தமது சொந்த ஊரில் மீள்குடியமர்த்தப்பட்டார்கள்.

இங்கு தான் இவர்கள் நிலை மேலும் கவலைக்கிடமாகிறது. காரணம் வறுமை இவர்களையும் விட்டுவைக்கவில்லை. இவரது இயலாமையால் மனைவி கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம். இருந்தும் வேலை கிடைப்பதும் அரிதாகவே இருந்தது. இதனால் மன விரக்தியடைந்த கிருஸ்துராசா ஒரு கடத்தில் அலரி விதையை உண்டு தன்னுயிரை மாய்க்க எண்ணி செயலிலும் இறங்கினார். ஆனால் அவர் காப்பாற்றப்படுகின்றார். இது ஒருபுறமிருக்க கணவனின் நிலையை எண்ணி மனைவியும் கிணற்றுக்குள் வீழ்ந்து தற்கொலைக்கு முயற்சிக்க அயலவர்களால் கப்பாற்றப்படுகின்றார்.

நாட்களும் நகர்ந்து சென்றது. இவர்கள் தம் வாழ்வில் எதாவது ஒரு முன்னேற்றம் வேண்டும் என்று எண்ணி நம்பிக்கை ஒளியின் சேவைகளை அறிந்து இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடக தமது நிலையை எடுத்துரைத்து உதவி கோரியிருந்தார்கள். இவர்கள் நிலமை தொடர்பாக இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சேவையாளர்கள் சென்று நேரடியாகப் பார்வையிட்ட பின்னர் இலண்டன், நம்பிக்கை ஒளியிடம் கிருஸ்துராசாவை மாதாந்த மருத்துவ உதவிக்காக பரிந்துரைக்கின்றார்கள். இதனையடுத்து நம்பிக்கை ஒளியும் 2015 தை மாதம் முதல் மாதாந்தம் 2500/= ரூபாயை தற்போது வரை வழங்கி வருகின்றது. எனினும் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பால் தானே சுயமாக எதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட கிருஸ்துராசா, தனக்கான மருத்துவ உதவியை நிறுத்தி ஓர் இரண்டாம் தர முச்சக்கர வண்டியை பெற்றுக் கொள்வதற்கான அரைவாசிப் பணத்தை, அதாவது 150,000/= ரூபாயை இலண்டன், நம்பிக்கை ஒளியிடம் எதிர்பார்த்து நிற்கின்றார். மிகுதியை கடன் மூலமாக கிராம அமைப்புக்களிடம் பெற எண்ணியுள்ளார். குறித்த தொகை கிடைக்கும் பட்சத்தில் இரண்டாம் தர முச்சக்கர வண்டியைப் பெற்று அதில் வருமானம் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக கூறுகின்றார் கிருஸ்துராசா.

கிருஸ்துராசாவின் நிலையில் நாமிருந்து ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் கால்கள் முடங்கினாலும், மனைவியையும், பிள்ளையையும், காக்க வழிதேடும் கிருஸ்துராசாவிற்கு உதவும் எண்ணம் என் உள்ளங்களில் உதிக்கும். இனியும் கிருஸ்துராசாவைப் போன்றவர்களை இழக்காமல் இருக்கவும் அவர்களை அவர்கள் சொந்த காலில் நிறுத்தவும் நாம் ஒவ்வொருவரும் தயாராக வேண்டும். கிருஸ்துராசா, நம்பிக்கை ஒளியிடம் கோரியிருக்கும் 150,000/= ரூபாய் எப்போது வழங்கப்படுமோ? அப்போதுதான் கிருஸ்துராசாவின் குடும்பத்தின் வாழ்விலும் நம்பிக்கை ஒளி பிரகாசிக்கும் என்பதை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

# விவசாயிகள் வாழ்வோடு அவ்வப்போது விளையாடிய காலநிலை

இந்த முறை காலநிலை கால போக நெற் செய்கைக்கு கொஞ்சம் விடிவைக் கொடுத்தது. மீள்குடியேறிய மக்களின் மனதில் ஒரு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆனாலும் தற்போது அவ்வப் போது மழை பெய்வதால் அறுவடை செய்யும் நிலையில் உள்ள நெல் வயல்கள் பாதிப்படைந்து வருகின்றன. இயற்கையோடு போராடி நெல் அறுவடையை மேற்கொள்கிறார்கள் விவசாயிகள். தமது வாழ்க்கைப் போராட்டத்தில் வெட்டிய நெல்லை விற்றாவது சாதித்து விட வேண்டும் என்ற பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் விவசாயிகளின் வாழ்க்கை போகிறது.



இந்த நிலை வடக்கின் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு என பரவலாக எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. அறுவடை இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்யும் விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 6,500 ரூபாய் முதல் 7,500 ரூபாய் வரை பணத்தை கூலியாக செலுத்துகின்றனர். மீள்குடியேறிய பல குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படாமையால் வெட்டிய நெல்லை காய வைத்து மூடையாக கட்டுவதற்கும் அவர்கள் படும்பாடு பெரும் போராட்டம் தான்.

மீள்குடியேறி தற்போது வசித்து வரும் தற்காலிக கொட்டகைகளில் நெல்லை காய வைக்க முடியாமையால் பலர் இன்று பிரதான காபெற் வீதிகளில் நெல்லினை பரவி காயவைத்து விட்டு கட்டுகின்றார்கள். இவ்வாறு பல போராட்டங்களுக்கு மத்தியில் பெற்ற விளைச்சலைக் கூட உரிய விலைக்கு விற்க முடியாது விவசாயிகள் படும்பாடு ஏராளமானது.

இந்த நிலையிலும், வெட்டிய நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை என்கிறார்கள் விவசாயிகள். அரசாங்கம் நெல்லுக்கு நியாயமான விலையை அறிவித்துள்ளது. ஆனால் தனியார் துறையினர் மக்களிடம் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்து வருகின்றனர்.

அரசாங்கம் சொன்ன விலைப்படி ஒரு மூடை நெல்லை 2,300, 3,000 ரூபாய்க்கு மேல் விற்க முடியும். ஆனால் அந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதற்குரிய வேலையை அரசாங்கம் சீராக செய்யவில்லை. இதனால் தனியாரிடமே மக்கள் விற்கவேண்டியுள்ளது. அவர்களும் 1700 , 2300 ரூபாய் என்ற பெறுமதியிலேயே நெல்லைக் கட்டுகிறார்கள். அதுவும் பச்சை நெல் எனக் கூறி நிறையில் பல வெட்டுக் கொத்துக்கள் நடைபெறுகிறது.



நெல்லுக்கான உத்தரவாத விலையை புதிய அரசு அறிவித்த போதும் அந்த விலைக்கு கொள்வனவு செய்யக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கூட மக்களிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்யவில்லை. அதனால் மக்கள் தமது அறுவடைப் பணம், தமது வாழ்க்கைச் செலவு என்பவற்றுக்காகவும் வெட்டிய நெல்லை வீட்டில் வைக்க இடம் இல்லாமையாலும் தனியார் துறைக்கே கொடுத்து வருகின்றனர். அவர்களும் ஒரு மூடை என கூடுதலான நிறையில் நெல்லைப் பெறுவதுடன் குறைந்த பெறுமதியையே கொடுக்கின்றனர். இதனால் பாதிக்கப்படுவது விவசாயிகளே.

வவுனியாவைப் பொறுத்தவரை நெல் களஞ்சியசாலை, நெல் காயவைக்கும் தளம் என்பன அடங்கிய பூங்கா வீதியில் அமைந்துள்ள பிரதான கட்டிடத் தொகுதி விசேட அதிரடிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனை




விடுவிக்குமாறு கடந்த வருட முற்பகுதியில் இருந்து மாவட்ட அரச அதிபரால் இராணுவத்திற்கு கோரிக்கை விடப்பட்ட போதும் இன்று வரை விடுவிக்கப்படவில்லை. அதனால் நெல்லை களஞ்சியப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. இதன்காரணமாக நெல்லினை கொள்வனவு செய்வதில் இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுகிறது.

விலையை யார் வேண்டுமானலும் அறிவிக்கலாம். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதே பொறுப்பு வாய்ந்த அரசின் கடமை. இயற்கையோடு போராடி அறுவடை செய்த நெல்லை நியாயமான விலையில் விற்பனை செய்து, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த விவசாயிகளின் எதிர்பார்ப்பு. இருப்பினும் முன்னைய அரசாங்கம் போலவே இந்த அரசாங்கமும் விவசாயிகளின் நலனில் அக்கறை செலுத்தாமல் ஓரவஞ்சனையுடன் செயற்படுவது வேதனைக்குரிய விடயமே.







ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்
கிளிநொச்சி 0775056263

# ஈழத்தில் தென்னந்தும்புக் கைத் கைத்தொழில் வளர்ச்சி..!



உலகின் சூழலிற்கு நட்பான பொருட்கள் சம்மந்தமாக ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுகாரணமாக தேங்காயின் உரிமட்டையிலிருந்து பெறப்படும் தென்னந்தும்பில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வகையான உற்பத்திகளுக்கு பெருமளவிலான கேள்வி உருவாகியுள்ளது. சிறிலங்காவின் தேங்காய்தத்தும்பு உற்பத்தியில் காணப்படும் உயர்ந்த இயல்புகள் காரணமாக அத் தொழிலின் ஈடுபட்டுள்ள பல்வேறு நாடுகளில் இலங்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தேன்னஞ்சோறுடன் சேர்ந்து உருவான தேங்காய் உரி மட்டையிலிருந்து வெள்ளை, கபிலம் என இருவகையான தேங்காய் தும்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வேள்ளைத் தும்பு கைத் தொழிலானது இலங்கையின் தென் பகுதியிலும், கபிலநிறத் தும்பு கைத்தொழிலானது தென்பகுதி மற்றும் தேங்காய் முக்கோண பிரதேசத்திலும் வியாபித்துள்ளது.

## கபில நிற தேங்காய் தும்பு உற்பத்தி.

உலர்ந்த உரிமட்டையானது நீர்த்தடாகங்களில் இடப்பட்டு 10 நாள் தொடக்கம் 6 மாதம் வரை உறவிடப்படும் நன்றான ஊறிய தேங்காய் உரிமட்டையானது நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு பாரம்பரிய இயந்திரமான அணிகளான ட்ரம்மில் பிடிக்கப்பட்டு வெளியஜலுள்ள மட்டைப் பகுதியும் சேற்றுப் பகுதிகளும் அகற்றப்படும். சுற்றிலும் சில்லைக் கொண்ட ரைஸி எனப்படும் இயந்திரத்தில் இடப்பட்டு மேலே பெறப்பட்ட தும்பில் சிறு பகுதிகளும் அகற்றப்பட்டு மெத்தை தும்பு பெறப்படும்.

இப்படி பெறப்பட்ட மெத்தை தும்பானது வெயிலில் காயவிடப்படும் இச் செயற்பாட்டுக்கு மேலதிகமாக நவீன தொழிநுட்ப முறைகள் அறிமுகப்படுத தப்பட்டுள்ளனதும்பகற்றும் இயந்திரம் மூலமாக பச்சை உரிமட்டையிலிருந்து ஊறவைக்கப்படாமல் தும்பு பெறப்படும்.

## இலங்கையின் தென்னந்தும்பு கைத்தொழில்

புாரம்பரிய இயந்திரம் மூலம் உலர்ந்த தேங்காய் உரிமட்டையிலிருந்து அகற்றப்படும் தென்னந்தும்புக்குப் பிறகு வகையில் மிஞ்சியுள்ள தும்பானது Bristleதும்பு எனப்படும்Brisetle தும்பானது சீவப்பட்டுப் பெறப்படும் நீளத்துக்கு ஏற்ப வகைப்படுத்தப்படும்.

முதலாவதாக சீவிய பின் கையில் மிஞ்சும் தும்பானது பகுதியாக சீவிய கட்டு ஒன்று உடைய தும்பு எனப்படும்

இரண்டாவது முறையாக சீவிய பின் கையில் மிஞ்சும் தும்பு சீவிய கட்டு ஒன்று உடைய தும்பு எனப்படும்.

மூன்றாவது முறையாக சீவிய பின் கையில் மிஞ்சும் தும்பானது கட்டு இரண்டினுடைய தும்பு எனப்படும்.

நான்காவது முறையாக சீவிய பின் கையில் மிஞ்சும் தும்பு கட்டு மூனறு உடைய தும்பு எனப்படும்.

சீவும் போது அகற்றப்படும் தும்பானது ழுஅயவ தும்பு எனப்படும் சீவிய டீசளைவடந தும்பானது சக்தி வாய்ந்ததும் விலை உயர்ந்ததும் ஆகும். இவற்றுள் மிக அதிக பெறுமதி உடைய கட்டு மூன்றுடைய தும்பாகும் **Bristle** தும்பின் மூலம் தலாசித்தூ-ரிகை, பெனிஸ்டர் தூரிகை, தும்புத்தடி போன்றவை உற்பத்தி செய்யப்படும்.



இவை தூசுகளை அகற்றி துப்பரவு செய்ய மலசல கூடங்களை துப்பரவு செய்ய பாவிக்கப்படும்.

**Omat** தும்பு மெத்தை தயாரிக்கவும் இறப்பர் சேர்க்கப்பட்ட மெத்தை வாகனங்களின் ஆசனப் பொதி செய்தல், மண்ணரிப்பு போன்றவற்றை தடுப்பதற்கு பயன்படுத்தப்படும். இத் தும்பு வகையானது ஏற்றுமதி செய்வதற்காக கயிறு போன்று திரிக்கப்படும் **Bristlestroke** மெத்தைத் தும்பு சம்மந்தமாக பின்வருமாறு நிர்ணணயிக்கப் பட்டுள்ளது.

வர்ணம் மென்கபிலம் மதல் பொன்னிற கபிலம் வரை ஈரப்பதன் 18மூகுறைவாக தூசு கழிவுப் பொருட்களின் அளவு 5.5ங்கு குறைவாக **Bristle (Twised fibere)** தும்பானது ஏற்றுமதிக்காக கயிறு போன்ற முறையிலும் போல் முறை **Ballet** முறையில் பொதி செய்யப்படும் மெத்தை தும்பானது பேல் **(Bele)** முறையில் அல்லது திரிக்கப்பட்ட கயிறாக ஏற்றுமதி செய்யப்படும்.

சிறிலங்காவிலிருந்து **Bristle** தும்பானது ஜேர்மனி, யப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. **Bristle** தும்பானது 50 மப இன் விலை 1250.00 ரூபாய் வரையிலும் மெத்தைத் தும்பானது 50kg இன் விலை 650.00 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

**Bristle** தும்பின் ஏற்றுமதி விலை கிட்டத்தட்ட மெட்ரிக்தொன்னிற்கு 500அமெரிக்க டொலர்களாகும். 20 அடி 40 அடி கொள் கலன்னளில் முறையே 817 மெட்ரிக்தொன்கள் **Bristle** தும்பும் 12,24 மெட்ரிக்தொன்கள் மெத்தைத் தும்பும் பெதி செய்யப்படலாம். மேலும் தென்னந் தும்பில் உற்பத்தி செய்யப்படும் பெருட்களில் தென்னங்கயிறு,**Twine** கயிறு போன்றவை கருத்தில் கொள்ளப்படலாம். இவற்றுக்கிடையிலான வேறுபாடானது **Twine** கயிற்றின் மத்தியில் சக்தியை அதிகரிப்பதற்கான **Twine** நூல் ஒன்று சேர்க்கப்பட்டி(ருக்கும்.



## தேங்காய் தும்புக் கைத் தொழில்

சாதாரலணமாக நன்கு முற்றிய தேங்காயிலிருந்து 680 கிராம் தும்பு கிடைக்கும். 1000 உரிமட்டைகளில் சராசரி 8082மப தும்பு கிடைக்கும்.

கயிறு திரித்தால் மாதக்கணக்கில் நிர் நிலைகளில் ஊறவிடப்பட்ட பொச்சு மட்டைகளை வெளியே எடுத்து நல்ல நீர் விட்டு அலசப்படும் பிறகு மரத்தின் மீது வைத்து மரச்சுத்தியால் அடித்து உதறும் போது தும்புச் சோற்றிகள் வேறாகப் பிரிந்து தும்புகள் எஞ்சுகின்றன.

கைகளால் பிரித்து எடுக்கப்படும் தும்புகள் உலர்ந்த பின் பொருத்தமான இயந்திரங்களில் கொடுத்து மேலும் தரம் பிரிக்கப் படுகின்றன. தும்புத் தொழிலின் நவீன முன்னேற்றம் முறையாக ஈரமாக்கப்பட்ட பொச்சு மட்டையினை நேரடியாக தும்பு வேறாகும் இயந்திர்தில் இட்டு தும்பினை வேறாக்க முடியும்.

இவ்வாறாக கைத்தொழில் முயற்சிகள் தாயகத்தில் தற்போது மருவி வருகினறது. இவ்வாறான கைத் தொழில் முயற்சியாளர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்று வித்து தாயகத்தில் கைத்தொழில் புரட்சியை ஏற்படுத்த முடியும்.

# மூன்று மகன்களை மாவீரர்களாக விதைத்த

## லோகநாயகி குடும்பத்துக்கு நம்பிக்கை ஒளியின் வாழ்வாதார உதவி



நாங்கள் அனைவருமே ஏதோ ஒன்றிற்காக அங்கும் இங்குமாக ஓடியாடித் திரிகின்றோம். வண்ணமயமான வாழ்க்கை வட்டத்தோடு நாமும் வலம் வருகின்றோம். ஆனால் பார்வையற்ற பலரோ இருள் சூழ்ந்த வாழ்வில் முடங்கி கிடக்கின்றனர். அவ்விதம் தான் ஒரு தாயானவள் தன் இரு கண்களையும் இழந்து வீட்டுக்குள் முடங்கி கிடக்கிறாள். இவள் சாதாரண தாய்களைப் போல் அல்ல. வீரத்தின் அடையாளமாகத் திகழ்ந்த வீரப் புலிகளைச் சுமந்த தாயவள். ஒன்றல்ல இரண்டல்ல மூன்று மகத்தான தனது பிள்ளைச் செல்வங்களை மாவீரர்களாக்கி, இன்று மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்பட்டு அவதியுறுகின்றாள்.

இந்த தாயவளைப் பற்றி நீங்கள் முன்னமே எமது "நம்பிக்கை ஒளி' மாதாந்த இலவச பத்திரிக்கை வாயிலாக அறிந்திருப்பீர்கள். வவுனியா மாவட்டத்தில் சிதம்பரபுரப் பக்கமாக உள்ள எல்லப்பர் மருதங்குளத்திற்கு அருகாமையில் உள்ளது தான் ஆனந்தபுரம். இங்கு 16ம் இலக்க காணியில் தான் வசித்து வருகின்றார் வீரப்பன் லோகநாயகி. கணவரின் பெயருக்கேற்றாற் போல் தனது நான்கு பிள்ளைகளையும் வளர்த்தெடுத்தவள் இந்த தாயானவள். விடுதலைப் போராட்ட காலத்தில் தனது "மனோகரா' என்ற மகனையும், "வசந்தி' என்ற மகளையும் மண்ணில் விதைத்தவள். அதுமட்டும் அல்லாது இராசேந்திரா எனும் மகன் இதுவரையிலும் கண்டறியப்படாமல் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார். எஞ்சிய மகள் தான் ஈஸ்வரி. ஈஸ்வரி தற்போது முள்ளியவளையில் வசிப்பதாக கூறுகிறார் அவரது தாயார் லோகநாயகி.

ஆனால் சோகம் இதுவல்ல. இது மானம் காக்க போராடிய மண்ணின் மைந்தர்களின் சாதனை. சாதனைக்குப் பின்னால் ஒரு சோதனை இருக்கும் என்பார்கள். இங்கோ சொல்லொணா சோகம் இவரைச் சூழ்ந்திருக்கிறது. கடந்த சில மாதங்களாக இரு கண்களுமே பார்வையற்ற நிலையில் தனது சகோதரியுடன் வாழ்ந்து வருகின்றார். தனது சகோதரியின் தொடர்பு கூட 20 வருடங்களின் பிற்பாடு தான் கிடைத்தது என்கின்றார். சகோதரிக்கு கணவன் இறந்துவிட்டார். சகோதரியின் மூன்று பிள்ளைகளில் ஒரு மகன் இந்தியாவில் அகதியாக வாழ்கிறார். இன்னொரு மகள் திருமணம் முடித்து அருகில் உள்ள ஊரில் வசிக்கிறார். கடைசி மகள் இவருடன் தான். வீட்டில் மூவரும் தான். அதாவது லோகநாயகி, அவரது சகோதரி, சகோதரியின் மகள். ஆண் துணை என்று யாருமில்லை. ஒரு சிறு கொட்டகை வீட்டில் வசிக்கிறார்கள்.

சகோதரியின் மகளுக்கு ஒரு கையும் ஒரு காலும் பிறவியில் இருந்தே சீராக வழங்காத நிலை காணப்படுகின்றது. இதனால் அவரை நொண்டி என்று அழைப்பதாக எம்மிடமும் கூறி வருந்தி அழுததுமுண்டு. இவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூற இயலாது. காரணம் தெளிவாக பேசுகின்ற திறமை இதனை மறைத்து நிற்கின்றது. அதேபோன்று மிக சிறப்பாக வரைகின்ற ஆற்றலையும் இவர் கொண்டுள்ளார். எனினும் வரைவதை பார்த்து பாராட்டுவதற்கு எவரும் முன்வருவதில்லை என்பதும் இவரது ஆழ்ந்த ஏக்கமாக உள்ளது.

மூவருமே ஏதோ ஒரு வகையில் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்கிறார்கள். நாம் முதன் முதலில் இவர்களின் நிலையை ஆராய சென்ற வேளை கிழிந்த கந்தல் துணிகளுடன் காணப்பட்டவர்கள் அதற்கு அடுத்தடுத்த நாட்கள் எமக்காக ஓரளவு நல்ல ஆடைகளை அணிந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. சிக்கன் புரியாணி, பீசா என்று மூன்று வேளையும் மூக்கு முட்ட தின்கின்ற எமக்கு இவர்கள் நிலை தலைகுனிய வைத்தது. ஒரு வேளைச் சோற்றை ஒழுங்காக சாப்பிடுகிறார்களா? என்றால் அது சந்தேகம் தான்.

லோகநாயகி கண் தெரியாததால் வீட்டின் ஒரு மூலையில் உட்கார்ந்திருப்பார். அவரது சகோதரியும், சகோதரியின் மகளும் வீட்டுத் தோட்டம் செய்து குடும்பத்தை கொண்டு செல்கின்றனர். குறிப்பாக **1/4** ஏக்கர் நிலத்தை கையால், மண்வெட்டி கொண்டு பண்படுத்தி அதில் வயல் செய்திருக்கிறார்கள். பல தலைமுறைகள் தாண்டி மீண்டும் இவர்களின் இந்த முயற்சி எம்மை வியப்பில் ஆழ்த்தியது. அதுமட்டுமல்லாது வேறு பல பயிர் கொடிகளையும் நாட்டியிருந்தார்கள். இதற்கு நீர் பாய்ச்சுவதற்கான வசதி இவர்களிடம் அறவே இல்லை. மாரிகாலத்தில் மழையை நம்பி பயிர் செய்வார்கள். பிற்பாடு கையால் நீர் இறைத்து ஊற்றுவார்கள். கிணறும் கட்டுக் கினறல்ல. பாழடைந்த ஓர் இடிந்த மண்கிணறு தான்.

இவ்வாறான நிலையில் தான், இவர்கள் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை லோகநாயகி வீட்டுக்குச் சென்று அவர்களுடைய முயற்சிக்கு வலுச்சேர்க்கும் முகமாக அவர்களின் குடும்பச்சுமையை குறைத்து தமது வாழ்வாதாரத்தை தாமே ஈட்டிக்கொள்ளும் வகையில் எவ்வாறான உதவிகள் தேவைக்கடுகின்றது என்று வினவியிருந்தனர்.

அதற்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்கினால் விவசாயம் செய்து குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமென கோரியிருந்தார்கள். லோகநாயகியின் வாழ்க்கைச் சுமைகளை தாங்கிய நேர்காணல் எமது நம்பிக்கை ஒளி பத்திரிகையில் முன்னமே பிரசுரிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் புலம்பெயர்ந்த உறவுகளின் உதவியில் லோகநாயகியின் குடும்பத்தின் வாழ்க்கை தரத்தை உயர்த்தை உயர்துவதற்கு வாழ்வாதாரம் வழங்க முன்வந்தது.

அதன்படி லோகநாயகியின் வீட்டிற்கு இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் பணியாளர்கள் சென்று நேரடியாகப் பார்வையிட்டு அவர்களுக்கு தேவையான நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் நீர்களை சேமித்து நீர்பாசனம் செய்யும் தண்ணீர் தொட்டி போன்றவற்றை அமைத்து கொடுத்தனர். தொடர்ச்சி 10ஆம் பக்கம்

09ஆம் பக்க தொடர்ச்சி

ஆண்களின் துணையின்றி வாழும் லோகநாயகி குடும்பத்துக்கு வெறுமனே பணத்தை மட்டும் வழங்கினால் பொருத்தமாக இருக்காது.

அவர்களின் குடும்பத்தின் வறுமையை போக்கும் முகமாக இலண்டன் நம்பிக்கை ஒளியின் இணை நிறுவனமான இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் பணியாளர்கள் நேடியாக சென்று பண உதவியும் சரீர உதவியும் வழங்கினார்கள் இவர்களின் சேவைகளை வெறுமனே இரண்டு வரிகளில் கூறிவிடமுடியாது. கீலே பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு புகைப்படங்களும் கதை கதைகள் சொல்லும்.

இந்த மகத்தாக வாழ்வாதார உதவிக்காக இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனம் **50,000/=** இலங்கை ரூபாயை ஒதுக்கியது. அதில் ஒரு சிறு தொட்டி அமைக்கவும், அதற்கு கூலியும் மற்றும் மோட்டாருடன் அதற்குரிய பொருத்து குழாய்கள் அத்தோடு மின்கம்பிகள் பெற்றுக் கொள்ளவும் **46,100/=** செலவாகியிருந்தது. மிதமாக இருந்த **3,900/=** ரூபாவை விதை தானியங்கள் கொள்வனவு செய்வதற்காக லோகநாயகி குடும்பத்திக் கையில் கொடுக்கப்பட்டது. இவை அனைத்தையுமே இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் நேரடி பார்வையின் கீழ் செய்து முடிக்கப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டது. மிக மிக வறுமையால் வாடிய தமது குடும்பத்தின் தேவையறிந்து நேரடியாக வீட்டிற்கு வந்து கூலியாட்கள் முதல் அனைத்து பொருட்களையும் ஏற்றி இறக்கி மூன்று நாட்கள் தாமும் நின்று உதவி செய்த இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளைக்கும் இலண்டன் நம்பிக்கை ஒளிக்கும் தமது மனம்நிறைந்த நன்றிகளை கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்ததை எமது கண்களும் அவதானிக்கத் தவறவில்லை.



இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் நேரடி கண்காணிப்பில் வாழ்வாதார வேலைத்திட்டம்..!



லோகநாயகி குடும்பத்துக்கு இலண்டன் நம்பிக்கை ஒளியினால் 50,000/= பெறுமதியில் நீர் இறைக்கும் பம்பி மற்றும் நீர் சேமிக்கும் தொட்டி ஆகியவை விவசாய ஊக்குவிப்பு உதவியாக வழங்கி வைக்கப்பட்டபோது..




# ஔவைப்பாட்டி கூறும் வாழ்க்கை நெறிகள்

ஔவையார் கூறுகின்ற வாழ்க்கைநெறிகள் பற்றிப் பார்க்கும் முன்னர் அப்புலவர் பற்றிய பாடல் ஒன்றை ஞாபகப்படுத்திக்கொள்வது பொருத்தமானது:

**ஔவைக் கிழவி நம் கிழவி**
**அமிழ்தத்தின் இனிய சொற் கிழவி**
**செவ்வை நெறிகள் பற்பலவும்**
**தெரியக் காட்டும் தமிழ்க் கிழவி**

அப் பாடலில் பொதிந்துள்ள கருத்தின் ஆழம் எவ்வளவு தூரம் உண்மை என்பது இங்கு நாம் பார்க்க இருக்கும் பாடல்களின் பொருளுணரும் போது விளங்கிக் கொள்ள கூடியதாக இருக்கின்றது. ஔவையார் எழுதிய நூல்களாக ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை, விநாயகர் அகவல், ஞானக்குறள் என்பனவற்றுடன் அவர் பாடியுள்ள சில தனிப்பாடல்களையும் குறிப்பிடலாம்.

ஔவையார் கூறுகின்ற வாழ்க்கைநெறி முறைகள் சிறுவர் முதல் பெரியோர்வரை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் இலகுதமிழ் மொழிநடையில் கூறப்பட்டுள்ளதுடன் அவற்றை மனப்பாடம் செய்வதும் எளிதாக உள்ளது. குறிப்பாக ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் சிறுவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஓரடியில்கூறி அவர்கள் தமது வாழ்வை செம்மையான வழியில் சிறுபராயத்திலிருந்தே தயார் செய்துகொள்ள வழிவகை செய்கின்கின்றது. எடுத்துக்கட்டாக ஆத்திசூடியில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களின் ஆழத்தை பின்வரும் அடிகளிலிருந்து புரிந்து கொள்ளமுடியும்.

**1.அறம் செய விரும்பு –**
நீ தருமத்தை(கடமையை)ச் செய்ய ஆவல் கொள்.

**2. ஆறுவது சினம் –**
கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.

**3. இயல்வது கரவேல் –**
உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்கு ஒளிக்காது கொடு.

**4. ஈவது விலக்கேல் –**
ஒருவர், மற்றவர்க்கு கொடுப்பதை, வேண்டாமென்று தடுக்காதே

**5.உடையது –**
விளம்பேல்-உன்னிடத்திலுள்ள பொருளை அல்லது இரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.

**6. ஊக்கமது கைவிடேல் –**
எப்போதும் முயற்சியைக் கைவிடக்கூடாது.

**7. எண் எழுத்து இகழேல் –**
எண்ணும் எழுத்தும் மக்களுக்கு இன்றியமையாதன் ஆகவே, அவற்றை வீணென்று-இகழ்ந்து கற்காமல் விட்டு விடாதே.

**8. ஏற்பது இகழ்ச்சி –**
இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக் கூடாது.

**9. ஐயம் இட்டு உண் –**
யாசிப்பவர்கட்கு கொடுத்து பிறகு உண்ண வேண்டும்.

**10. ஒப்புரவு ஒழுகு –**
உலக நடையை அறிந்துகொண்டு, அத்தோடு பொருந்துமாறு நடந்துகொள்.

**11. ஓதுவது ஒழியேல் –**
நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக்கொண்டிரு.

**12. ஔவியம் பேசேல் –**
ஒருவரிடமும் பொறாமை கொண்டு பேசாதே.

**13.அஃகஞ் சுருக்கேல் –**
அதிக இலாபத்துக்காக, தானியங்களை குறைத்து அளந்து விற்காதே.

இங்கு ஔவையின் "சுருங்கச்சொல்லலி விளங்க வைக்கும்" நயம்போல வேறெந்த தமிழி இலக்கியத்திலும் இல்லையென்றே சொல்லலாம்.

மனிதகுலம் வாழ்வாங்குவாழ அறம், பொருள், இன்பம் என்பன எவ்வாறு உதவி புரிந்து வீடு(முக்தி) என்னும் பெருநிலையை எட்ட வைக்கின்றது என்பதைச் சொல்ல வள்ளுவப் பெருந்தகை 1330 பாடல்களில் திருக்குறளைப் பாடியுள்ளார் . ஆனால் ஔவையாரோ தனது ஒருபாடலிலேயே அதனை விளக்கியிருகின்றர். அப்பாடல்:

**ஈதலறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்**
**காதலிருவர் கருத்தொருமித்து – ஆதரவு**
**பட்டதே இன்பம்பரனை நினைந்து இம்மூன்றும்**
**விட்டதே பேரின்ப வீடு.**

**இதன் பொருள்: –**

மற்றவர்களுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல், எடுத்துக் கொடுத்தலே "ஈதல்"என்று சொல்லத்தக்க அறமாகும். நாம் ஈட்டுகின்ற பொருளில் எவ்விதக் குற்றங்களும் இருக்க கூடாது. அதாவது நல்வழியில் மட்டுமே பொருளைச் சம்பாதிக்க வேண்டும். கணவனும் கணவனும் மனைவியும் கருத்து ஒற்றுமையோடு ஒருவருக்கொருவர் அன்பு காட்டி வாழ்தலே இல்லறமாகிய இன்பம். இம்மூன்று நிலைகளிலும் சரிவர வாழ்ந்தபின், "போதும்" என்ற எண்ணம் நிறைந்து இந்த மூன்றின் பற்றுக்களையும் அறுத்து விட்டு, இறைவனை மட்டுமே நாடுகின்ற நிலைதான் பேரின்பமாகிய "வீடு"(முக்தி) என்கிறார்.

ஔவையார் பாடிய தனிப் பாடல்களில் நான்கு கோடிப் பாடல் மிகவும் பிரசித்தமானது. இது எவ்வாறு ஒருவர் நான்கு கோடிகளுக்கு அதிபதியாகலாம் என்பதை கூறுகிறது.

**மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று**
**மிதியாமை கோடி பெறும்**

**உண்ணீர் உண்ணீரென்று உபசரியார்**
**தம்மனையில் உண்ணாமை கோடி பெறும்**

**கோடி கொடுப்பினும் குடிப்பிறந்தார்**
**தம்முடனே கூடுதலே கோடி பெறும்**

**கோடானு கோடி கொடுப்பினுந் தன்நாக்**
**கோடாமை கோடி பெறும்.**

**இப்பாடலின்பொருள்** - என்னவெனில் எம்மை ஒருவர் மதிப்பளித்து நடவாதுவிடில் அல்லது எம்மை கண்டும் காணாதவராக நடந்து கொள்வராயின் அவர் ஏதாவது தேவையின் நிமித்தம் நம்மை அழைக்கின்ற பொழுது அவரை மதித்து அவரது வீட்டுக்கு செல்லாதிருப்பதனது ஒருகோடி பெறுமதி வாய்ந்தது. அது மட்டுமன்றி நாம் ஒருவருடைய வீட்டுக்குச் செல்லும் பொழுது எம்மை உரிய முறையில் உபசரிக்காவிடத்தில் அவ்வீட்டில் உண்ணாது வருவ தானதும் ஒருகோடிக்கு சமமானது.

மேலும் நாம் நற்பண்புடையவருடன் எவ்வளவு பெறுமதி கொடுத்தாவது சேருதலானதுவும் ஒரு கோடிக்கு சமமானது இவை போல நாம் இன்னும் ஒரு கோடிக்கு அதிபதியாக வேண்டுமெனில் ஒருவருக்கு கொடுத்த வாக்கை எவ்விடர்வரினும் தளராது காப்போமாகில் அதுவும் எம்மை கோடீஸ்வரராக்கிவிடும். இங்கு ஔவை சொல்லும் கோடி என்பது பணப்பெறுமதியல்ல பணத்தால் அளவிடமுடியாத சில உயரிய பண்புகளை எம்மிடையே வளர்துக் கொள்ளளும் வழியைச் சொல்கிறார் . இது போலவே மூதுரையில்

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி**
**'என்று தருங்கொல்?'எனவேண்டாம் –நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான்தருத லால்.**

**தொடரும்....**



# உலகெங்கும் வலம்வரும் யாழ் பனங்குட்டான்

யாழ்ப்பாணம் என்றவுடன் நினைவுக்கு வருவது பனை மரங்கள் தான். யாழின் பிரதான வளமான பனையை நாம் பல இலட்சினைகளில் கூட கண்டதுண்டு. ஏன் வடக்கு மாகாணசபையின் இலட்சினையில் கூட பனைமரம்தானே உள்ளது. அந்தளவிற்கு தமிழர்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளது. இந்த பனை மரத்தின் ஓலை, குருத்து, மட்டை, காய், பழம், என நுனிமுதல் அடிவரை அனைத்து பகுதிகளுமே நமக்கு பயன்களை அள்ளித் தருவதால் அதனை "கற்பகதரு" என்பர். இருந்தாலும் நம் ஊரில் உற்பத்தியாகி உலகெங்கும் ஏற்றுமதி செய்யப்படும் "பனங்குட்டான்"க்கு மவுசு அதிகம். போர்ச்சூழல்நிலவிய காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் சரி, வன்னியிலும் சரி, தேனீருக்கு கூட சீனி இல்லாத நிலமைகள் பலதடவை வந்தன. அந்நேரத்தில் பனங்குட்டான் தான் கைகொடுத்ததை நிச்சயமாக யாராலும் மறக்கமுடியாது. இப்போது கூட பனங்கட்டியுடன் தேனீர் குடிச்சாத்தான் பலருக்கு திருப்தியாக இருக்குமாம்.

ஆனால், பனங்கட்டி எவ்வாறு தயாரிக்கப்படுகிறது. அதில் என்னென்ன மூலப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன என்பது பற்றி பலரும் முழுமையாக அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இது ஒன்றும் சுலபமில்லை. பனங்கட்டி காய்ச்சுவது ஒன்றும் சுலபமானதில்லை. இதற்கு மிகுந்த கைப்பக்குவம் தேவை. பதம் சற்று பிசகினால் கூட விற்கமுடியாதபடி வந்துவிடும். காய்ச்சும் வெப்பநிலை அளவுகள், நேர அளவுகள், கலவை அளவுகள் என்பன அதனை தயாரிப்பவர்களின் பட்டறிவுகள் தானேயன்றி தரவு வடிவில் எதுவும் இல்லை. சரியான வெப்பத்தில் காய்ச்ச வேண்டும். எல்லாவற்றிலும் உச்சக்கட்டம் இறக்கும் பதம்தான். கொஞ்சம் முன்னே, பின்னே இருந்தாலும் குட்டானில் ஊற்றமுடியாது அதன் சுவை மாறிவிடும்.

## குட்டான்

பனை ஓலையால் இழைக்கப்படும் ஓர் சிறிய உருளைதான் குட்டான். இந்தக் குட்டானில் பனங்கட்டி உள்ளதால் இது ஆரம்பத்தில் "பனங்கட்டி குட்டான்" என்று அழைக்கப்பட்டு தற்போது மருவி பனங்குட்டான் என்று அழைக்கப்படுகின்றது.

## எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

முதற்கட்டமாக பனையிலிருந்து பதநீர் பெறப்படுகிறது. பங்குனி மாதத்தில் பாகுத் திணிவைக் கொண்ட பதநீரை பனை மரங்கள் அதிகம் சுரப்பதால் காலப்பகுதியில் சேகரிக்கப்படும் பதனீர்தான் பனங்கட்டிக்கு உகந்த தன்மையைக் கொண்டதாம்.

பதநீர் கொதித்துக் கொள்ளாமல் இருப்பதற்காக மண் மூட்டைகளில் சுண்ணாம்பு தடவி பதநீர் பெறப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் பதநீர் மொத்தமாக பனங்கட்டி உற்பத்தி சாலையினரால் கொள்வனவு செய்யப்பட்டு தொட்டியில் இடப்பட்டு குறிப்பிட்டளவு வெப்பநிலையில் காச்சப்படுகின்றது. பதநீர் பாணித்தன்மையானதும் அவை குட்டானில் ஊற்றி அடைக்கப்படுகின்றது. தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களில் இறுகி கட்டியாகின்றது.

வெப்பநிலை சற்று ஏற்றும் போது மருத்துவ தேவைகளுக்கு பயன்படுத்தப்படும்.

"கல்லாகாரம்" பெறப்படுவதுடன் வெப்பநிலை நன்கு உயரும் போது "பனஞ்சீனி" பெறப்படுகின்றது. உரிய சந்தை வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தினால் பெரும்பாலும் பனஞ்சீனி உற்பத்திகள் செய்வதில்லை. அனைத்து தொழிற்சாலைகளும் பனங்கட்டி, பனங்குட்டான்களை முதன்மைப்படுத்தியே இயங்குவதாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் வரதராசா நம்பிக்கை ஒளிக்கு தெரிவித்தார்.



## உலகெங்கும் ஏற்றுமதி

உள்ளூரில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் "பனங்குட்டான்"க்கு பெரும் வரவேற்பு கிடைப்பதால் தாயகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் "பனங்குட்டான்" உற்பத்தி கூடுவதுடன், பலருக்கு தொழில் வாய்ப்பும் பெற்றுத்தர முடியுமென பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் வரதராசா தெரிவித்தார்.

நம் ஊரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உலகெங்கும் கேள்வி இருப்பது நமக்கெல்லாம் பெருமை தான். பனங்குட்டான் உற்பத்தியை நாம் ஊக்குவித்தால் மேலும் பல தொழிற்சாலைகளை இங்கு உருவாக்குவதுடன் பலருக்கு வேலைவாய்ப்புக்களையும் வழங்கமுடியும்.

## பனங்கட்டியின் மருத்துவ குணங்கள்.

பதநீரை காச்சி அதிலிருந்து பெறப்படும் பனங்கட்டிக்கு சுவை, மணம் இருப்பதோடு மட்டுமல்லாமல் மருத்துவ குணங்களும் அதிகம் இருக்கின்றது. இயற்கை முறையில் தயாரிக்கப்படும் பனங்கட்டி நமது உடலை சுத்தப்படுத்தி செறிமானத்துக்கு பணிபுரிகிறது. பருவமடைந்த பெண்களுக்கு பனங்கட்டியும் உழுந்தும் சேர்த்து உழுந்தங்களி செய்து கொடுத்தால் இடுப்பு எழும்பு வலுப்பெறுவதுடன், கருப்பையும் ஆரோக்கியமாக இருக்கும். மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்க பனங்கட்டி சாப்பிடலாம். நன்கு பசி எடுக்கும் ஓமத்தை பனங்கட்டியுடன் சாப்பிட்டால் வாயுத்தன்மை நீங்கும். குப்பை மேனிக் கீரையுடன் பனங்கட்டியை சேர்த்து வறட்டி சாப்பிட்டால் வறட்டு இருமல் சளித் தொல்லை நீங்கும் தேனீருக்கு சீனிக்கு பதிலாக பனங்கட்டிளை சேர்த்து குடித்தால் உடலின் சக்கரையின் அளவு கட்டுப்பாடாக இருக்கும்.

இதில் சுண்ணாம்புச் சத்து, நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகமாக இருக்கின்றது. சர்க்கரை நோயாளிகள் கைக்குத்தல் அரிசி சாதத்துடன் பனங்கட்டியை கலந்து சாப்பிட்டு வந்தால் சக்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அடிக்கடி சிறுநீர் போவதும் குறையும்.

# நம்பிக்கை ஒளியின் இல்ல மெய் வல்லுனர் திறனாய்வு போட்டி..!





யுத்தத்தில் முற்று முழுதாக பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலையே இந்த நொச்சிக்குளம் கனிஸ்ட பாடசாலை. அடிப்படை வசதிகளின்றி இயங்கும் குறித்த பாடசாலை மாணவர்களுக்கான திறனாய்வு விளையாட்டு போட்டி இம் முறை இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. மீள் குடியேற்றத்துக்கு பின் இந்தப் பாடசாலையில் இவ்வாறு விளையாட்டு போட்டிகள் நடைபெறவில்லை என குறித்த பாடசாலை அதிபர் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கு தெரியப்படுத்தி விளையாட்டு போட்டிகள் நடாத்துவதற்காக மாணவர்களுக்கான பரிசுப் பொருட்களை வழங்கி உதவுமாறு கோரியிருந்தார். மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட இலண்டன் நம்பிக்கை ஒளி குறித்த பாடசாலையின் விளையாட்டு போட்டியை பொறுப்பேற்று நடாத்தியது. இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் முதல் நொச்சிக்குளம் கிராமத்தில் வசிக்கும் அனைத்து மக்களும் ஒன்று திரண்டு மன மகிழ்வுடன் விளையாட்டு விழாவை சிறப்பித்த அதே வேளை இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்துக்கு தமது நன்றிகளை தெரிவித்தனர்.










யுத்த இழப்புக்களை எதிர் கொண்ட ஓமந்தை நொச்சிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வலுல்லுனர் திறனாய்வுப் போட்டியில் அனைத்து மாணவர்களுக்கும் இலண்டன் நம்பிக்கை ஒளியினால் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டது.







# 'மீள்குடியேறிய மக்களின் வாழ்வில் விளையாடிய கச்சான் பயிர்ச்செய்கை'



யுத்த மேகங்கள் மறைந்து அபிவிருத்திகள் ஆங்காங்கே தென்பட்டாலும் எல்லோர் கண்ணிலும் அது தெரிவதாக இல்லை. அன்றாடம் ஒரு வயிறு சோற்றுக்காக போராடும் நிலையிலேயே இன்றும் பல குடும்பங்கள் வன்னியில் வாழ்ந்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், யுத்தத்தில் காயமடைந்து இயலாமையுடன் வாழும் குடும்பங்கள், கணவன்மாரை காவு கொடுத்துவிட்டு வாழும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் படும் துன்பத்திற்கு அளவே இல்லை. இவர்கள் அன்றாடம் தமது சீவியத்திற்காக பல்வேறு தொழில்களையும் செய்து வருகின்றனர். ஆனால் அதில் கிடைக்கும் வருமானம் தான்.....?

தோட்டம் செய்தல், விறகு வெட்டி விற்றல், பாலைப்பழம் விற்றல், தேன் எடுத்தல், வேட்டையாடுதல் என பல தொழில்களை இவர்கள் செய்து வருகின்றனர். இதில் சில தொழில்களை செய்ய முடியாதவாறு அரச அதிகாரிகளின் அழுத்தங்களும் இவர்களுக்கு உண்டு. வன்னியின் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளிலும் மக்கள் தமது வீட்டுக் காணிகளிலும், தோட்டங்களிலும் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கச்சான் செய்கை முக்கியம் பெறுகிறது.



அதிகநம்பிக்கையுடன் கச்சான் பயிர்செய்கையில் ஈடுபட்ட மக்கள் தற்போது அந்த பயிர்செய்கைக்கு செலவு செய்த பணத்தைக் கூட மீள முடியாமல் கஸ்ரப்படும் நிலையில் உள்ளனர். கொட்டித் தீர்த்த மழை காரணமாக கச்சான் பயிர்செய்கை பாதிப்படைந்துள்ளது. கச்சான் செடிகளில் முத்துக்களின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால் கடன்வாங்கியும், இருந்த நகைகளை அடைவு வைத்தும் பயிர்செய்கையில் ஈடுபட்டவர்களின் நிலமை தற்போது கண்ணீர் கதையாகிவிட்டது.

கச்சான் செய்தாவது எமது குடும்பத்தை கொண்டு நடத்துவோம் என நினைத்தோம். ஆனால் இந்த மழை கூட எம்மை விட்டு வைக்கவில்லை. மழை காரணமாக வார் அடித்துச் சென்ற வெள்ளத்தால் கச்சான் செய்கை பாதிப்படைந்து விட்டது. நாங்கள் என்ன செய்வோம். நாங்கள் ஆடம்பர வாழ்க்கையை கேட்கவில்லை. மூன்று நேரம் சாப்பிடக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தித் தாருங்கள். இந்த அரசாங்கம் ஏன் எங்களை புறக்கணிக்கிறது. கச்சான் செய்கையால் பாதிப்படைந்தவர்களுக்கு ஒரு நஸ்ட ஈடும் இல்லை. கூலி வேலை செய்து வாழலாம் என்றால் அது கூட கிடைக்கவில்லை என்கின்றனர் கனகராயன்குளம் பகுதியில் கச்சான் செய்கையில் ஈடுபடும் மக்கள்.

கச்சானுக்கு சந்தையில் சிறந்த கேள்வி இருப்பதால் அதனை மீள்குடியேறிய மக்கள் பயிரிட்டனர். ஆனால் அவர்களின் நிலமை தற்போது கேள்விக்குறியே.

நாளாந்தம் வாழ்வதற்காக போராடும் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது. அரசாங்கம் வாழ்வாதார உதவித்திட்டங்கள், சமுர்த்தித் திட்டங்கள் என்பவற்றை பலருக்கும் வழங்கிவருகின்றது.

வடமாகாணசபை கூட வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றது. ஆனால் அவை யாருக்கு வழங்கப்படுகின்றது என்ற கேள்வியும் எழாமல் இல்லை. பல குடும்பங்கள் தற்போதும் ஒரு வயிறு சோற்றுக்காக போராடும் நிலையில் இருக்கும் போது அபிவிருத்தி, வாழ்வாதார விருத்தி என கூறுவது எவ்வகையில் பொருத்தமானது. எனவே, இந்த குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்ற புலம் பெயர்ந்த உறவுகள் உதவிக்கரம் நீட்டவேண்டும்..



'கிளிநொச்சி பாரதிபுரத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சசிக்குமார் குடும்பத்துக்கு நம்பிக்கை ஒளியினால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவித்திட்டத்தின் மீளாய்வு இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையால் மேற்கொள்ளப்பட்டது. இந் நிலையில் குறித்த வாழ்வாதார உதவி மூலம் சசிக்குமார் குடும்பம் நாளொன்றுக்கு 1000 ரூபாய் தொடக்கம் 1300 ரூபாய் வரை வருமானத்தை பெற்றுவருவதை அவதானிக்க முடிந்தது.'




# யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வினோஜன் குடும்பத்துக்கு நம்பிக்கை ஒளியினால் வாழ்வாதார உதவி...!

நான்காம் கட்ட ஈழப்போர் முடிவடைந்து வருடங்கள் பல கடக்கின்றன. இருந்தும் "யாராவது நன்றாக உள்ளார்களா?" என்றால் அது கேள்விக்குறி தான். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஈழத்தில் இருந்த ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் பாதிக்கப்பட்டவர்கள் தான். அதிலும் பலரது வாழ்க்கை இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லை என்பது தான் கவலையளிக்கின்ற விடயம். எத்தனை காலங்கள் கடந்தாலும் உடம்பில் சுமக்கும் வெளிக்காயங்களாக இருக்கட்டும், உட்காயங்களாக இருக்கட்டும் எதுவுமே ஆறப்போவதில்லை என்பது தான் உண்மை.

இவ்விதமாக இறுதிக்கட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர் தான் அழகர்சாமி வினோஜன். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டன், சிவநகரை சொந்த இடமாகக் கொண்ட இவர் 1994ஆம் ஆண்டு பிறந்தவர். ஆரம்பத்தில் 3ம் கண்டம், கற்சிலைமடுவில் வசித்த இவர்கள் 2004 ஆம் ஆண்டுக்கு பிற்பாடே சிவநகரில் குடியேறினர். அப்பா, அம்மா ஒரு தம்பி, ஒரு தங்கை என அழகியதோர் குடும்பம் தான் வினோஜனின் குடும்பம். தந்தை கூலித் தொழில் செய்தே குடும்பத்தை நகர்த்தி வந்தார். வினோஜன் தனது பதினைந்தாவது வயதில் யுத்தத்தை எதிர்கொண்டான். யுத்தத்தின் உக்கிரம் வன்னியில் வாழ்ந்த மக்களை இடப்பெயர்வுக்குத் தள்ளியது. ஒட்டுசுட்டானில் இருந்து இடம்பெயர்ந்து வித்தியாபுரம், புதுக்குடியிருப்பு, கைவேலி என ஒவ்வொரு இடங்களாக தற்காலிக கொட்டகை அமைத்து தங்கள் இருப்பிடத்தை உறுதிசெய்து கொண்டனர் வினோஜன் குடும்பம்.

2009இன் ஆரம்ப பகுதி அது. ஒருவேளை உணவுக்கு கூட ஏதாவது ஒரு நிறுவனத்திடம் கையேந்த வேண்டிய நிலையே காணப்பட்டது. கைவேலியில் இருந்து தேவிபுரத்திற்கு ஒரு நிறுவனத்திடம் உலர் உணவுகள் பெற்றுக் கொள்வதற்காக வினோஜனும் அவனது நண்பர்களும் ஏனைய சிலரும் சென்றார்கள். அங்கும் இராணுவம் தன் . ஷெல்வீச்சின் . இலக்கை நிர்ணயித்திருந்ததை இவர்கள் அறியவில்லை. பிறகென்ன? உலர் உணவுபெறும் இடத்திலும் ஷெல் மழை பொழிந்தது. வீடுகளிலும், வீதிகளிலும் காணப்பட்ட பதுங்கு குழிகளுக்குள் உயிரைக் காக்க அடைக்கலம் தேடினர் அனைவருமே. ஷெல் மழை ஓயவும் எம் உறவுகளின் இரத்தம் ஆறாக ஓடியதைக் கண்ட பலரும் கதறி துடித்தனர்.

சிலர் உயிர் இருந்தும் இல்லாதவர்களாக ஆங்காங்கே வீழ்ந்து கிடந்தனர். அதில் ஒருவனாக வினோஜனும் மயக்கமுற்று கிடந்தான். வினோஜனின் வலது கையிலும் காலிலும் ஷெல் வீச்சின் துகள்கள் பதம் பார்த்திருந்தன. உடன் இருந்து உயிர் தப்பிய நண்பர்கள் வினோஜனை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். இந்தவிடயம் வினோஜனின் குடும்பத்தினருக்குத் தெரியாது. வைத்தியசாலைக்குச் சென்றால் வினோஜனைப் போல் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டவர்கள் சிகிச்சை பெற்றும் பெறாததுமாய் வைத்தியசாலை வாசல் வரையும் காணப்பட்டனர். மருந்து, மாத்திரைகள் இல்லாத காரணத்தினால் வெறும் வெற்றுத் துணிகளால் காயங்கள் கட்டப்பட்டு இரத்தத்தை மாத்திரம் கட்டுப்படுத்த வைத்தியர்களும், தாதிமார்களும் முயற்சி செய்தனர்.

கடமையிலிருந்த வைத்தியரிடம் வினோஜன் கொண்டு செல்லப்படவே கை, கால்களில் இருந்த ஷெல் துகள்களை அகற்ற முடிவு செய்யப்பட்டது. அதற்காக மேலதிக சிகிச்சைகளுக்காக கப்பல் மூலம் அனுப்ப வேண்டும் என கூறினர் வைத்தியர். உடன் இருந்த அவனது நண்பர்கள் வினோஜனை கப்பலில் ஏற்றிவிட்டு, வினோஜனின் வீட்டாரிடம் வந்து வினோஜனுக்கு நடந்ததை விபரித்தார்கள். மார்தட்டி அழத்தொடங்கிய தாயின் கதறலை அங்கிருந்த எவராலும் கட்டுப்படுத்தமுடியவில்லை.

வினோஜன் கப்பல் மூலம் புல்மோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டு, திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆறு மாதங்களின் பிற்பாடு கோமா நிலையில் இருந்து மீண்ட வினோஜனை செட்டிகுளம், ஆனந்தகுமாரசுவாமி இடைத்தங்கல் முகாமின் 1ம் யுனிற்றில் தங்க வைக்கப்பட்டார்..

ஒவ்வொரு முகாம்களாக தேடியும் தனது குடும்பத்தை வினோஜனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. தெரிந்த முகங்களிடமும் கேட்டால் பதில் இல்லையென்பதே முடிவாக இருந்தது. தன் குடும்பமே இல்லை என்ற முடிவோடு வாழத்தொடங்கினான் வினோஜன். இப்படியே மேலும் ஆறு மாதங்கள் நகர்ந்தது. ஆறு மாதங்களின் பின் ஒருவழியாக விடைகிடைத்தது. தன்குடும்பத்தைக் கண்டறிந்தான். அளவில்லா சந்தோசம் கொண்டான் வினோஜன். பெற்றோருக்கும் தன்பிள்ளை கிடைத்ததும், அவன் தம்பி, தங்கைக்கும் அண்ணா கிடைத்ததும் மிகவும் ஆரத்தழுவிக் கொண்டாடினர். ஒன்றாக இணைந்த வினோஜன் குடும்பம் முகாமிலும் சில காலம் வாழ்க்கையை நகர்த்தியது. அங்கும் பல்வேறு துன்பங்களை வினோஜனும் அவனது குடும்பமும் எதிர்கொள்ள நேரிட்டது.

முகாமிலிருந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தமது சொந்த ஊரில் குடியேறினர் வினோஜனது குடும்பம். குடும்பத்தின் வறுமை தலை தூக்கியது. தந்தையின் கூலித்தொழிலும் அவ்வப்போது தான் கிடைத்தது. அவனது தம்பி, தங்கையின் பள்ளிச் செலவுகளையும் பார்க்கவேண்டும். வினோஜனும் ஊன்று கோலுடன் கூலித் தொழில் செய்யத் தொடங்கினான். எனினும் இது அவனுக்கு மிகுந்த சிரமத்தையே கொடுத்தது. பிற்பாடு தன் இயலாமையை எடுத்துரைத்து ஒரு நிறுவனத்திடம் கதைத்து தனக்கு ஒரு சிறிய கடை வைத்து தருமாறு உதவி கோரினான். அந்த நிறுவனமும் இவனின் கோரிக்கைக்கு செவி சாய்த்து 40,000.00ரூபாய் வழங்கியது. குறித்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிதியில் கடையைக் கூட பூரணமாக கட்டிமுடிக்க போதாமல் இருந்தது. எனவே, வினோஜன் தானே நின்று கடையை கட்டினான். இருப்பினும் குறித்த கடையின் கூரை வேலை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

15ஆம் பக்க தொடர்ச்சி

செய்வதற்கு வசதியின்றி கடையை இடையில் கைவிட்டு மீண்டும் கூலிவேலைக்கு சென்றார்.

வினோஜனின் நிலையை அறிந்த இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் இதன் இணை நிறுவனமாக இலங்கையில் செயற்படும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக வினோஜன் குடும்பத்தின் வாழ்வாதார தேவையை பூர்த்தி செய்வதற்கு முன்வந்தது.

முதற் கட்டமாக வினோஜனின் வீட்டுக்குச் சென்று குடும்ப நிலவரங்கள் மற்றும் வருமானங்கள் தொடர்பாக கேட்டறிந்து தரவுகளை பெற்றனர்.

தொடர்ந்து தரவுகளை இலண்டன் நம்பிக்கை ஒளிக்கு அறிக்கை வடிவில் அனுப்பி வினோஜன் குடும்பத்தின் வாழ்வாதார தேவையை உறுதிப்படுத்தியது இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை.
அதனைத் தொடர்ந்து வினோஜன் குடும்பத்திடம் சென்று எவ்வாறான உதவிகள் செய்தால் தொடர்ந்தும் யாரிடமும் உதவி கோராமல் சுயமாக உங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியுமென கேட்கப்பட்டது. தனது கடையை திருத்தி அவற்றுக்கு தேவையான பொருட்களை பெற்றுத்தந்தால் குறித்த கடையின் மூலம் தனது வாழ்வாதாரத்தை கொண்டு செல்லமுடியுமென வினோஜன் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அடுத்த கட்டமாக இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சேவையாளர்களின் மேற்பார்வையில் வினோஜனின் கடையின் கூரை வேலைகளும் திருத்த வேலைகளும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊழியர்கள் கடைக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்து கடையில் அடுக்கி வினோஜ்னின் குடும்பத்தின் வாழ்க்கைக்கு ஒளியேற்றி வைக்கப்பட்டது.

இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை
சேவையாளர்களின் நேரடி கண்காணிப்பில் கடையினை மீள் திருத்த 25,000/= ரூபாயும், பொருட்கொள்வனவிற்காக 50,000/= ரூபாயுமாக மொத்தமாக 75,000/= ரூபாய் வழங்கப்பட்டது.

தற்போது வினோஜனது காயப்பட்ட வலது கை, மற்றும் காலில் உணர்ச்சி இருந்தும் விரல்கள் இயங்காத நிலையே காணப்படுகின்றது. அத்தோடு மூட்டுக்களில் பொருத்தப்பாடில்லாத ஒரு நிலையினையும் அவதானிக்க முடிகிறது. தன்னம்பிக்கை இழக்காத வினோஜன் தன்னால் முடியும் எனும் நம்பிக்கை கொண்டு, நம்பிக்கை ஒளியின் உதவியில் பிரகாசிக்கிறார். அவனது முகத்தில் காணப்பட்ட பிரகாசம், தன் குடும்பத்தில் இனி தனது பங்கும் இருக்கும் என்பதோடு தனது, தம்பி, தங்கையின் கற்றல் செலவுகளுக்கான பொறுப்பை தானே ஏற்க முடியும் என்ற நம்பிக்கை அவனுக்குள் அளித்திருக்க வேண்டும். அவனது முகத்தின் புன்னகை அதைதான் எமக்கு சொல்லியது. தேவையறிந்து தக்கதருணத்தில் உதவும் நம்பிக்கை ஒளிக்கு நன்றிகள் தெரிவித்ததுமல்லாமல் நம்பிக்கை ஒளியின் சேவை தொடர வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டனர் வினோஜனது குடும்பத்தினர்.





# பாடசாலை காலை ஒன்று கூடலில் மயங்கி விழும் மாணவர்கள்..!





## அதிர்ச்சி தகவல் முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமப் புறங்களில் இயங்கும் பாடசாலைகளில் காலை ஒன்று கூடலின் போது பல மாணவர்கள் மயங்கிவிழும் பரிதாபநிலை காணப்படுவதாக பாடசாலை அதிபர்கள் நம்பிக்கை ஒளி செய்திப்பிரிவிக்கு தெரிவித்தனர்.

முல்லைத்தீவு தண்ணீரூற்று, குமுழமுனை, கொக்கிளாய், கருநாட்டங்கேணி, முறிப்பு, செம்மலை, போன்ற பல கிராமங்களில் இயங்கும் பாடசாலைகளிலேயே மாணவர்கள் காலை ஒன்று கூடலில் மயக்கமுற்று விழுவதாக அதிர்ச்சி தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

யுத்த காலப்பகுதிகளுக்கு பின் மீள் குடியேறிய மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டபோதும் அவற்றை முற்றுமுழுதாக கட்டி முடிப்பதற்காக அரசினால் வழங்கப்பட்ட தொகை போதாமல் இருந்தமையால் வறிய மக்கள் தமது நகைகளையும் உடமைகளையும் விற்று வீட்டுத்திட்ட வீட்டை பூரணமாக கட்டுவதற்கு பெரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு காலைச்சாப்பாடு செய்து கொடுப்பதற்கு கூட வசதிகள் இன்மையால் தமது பிள்ளைகளை பசியுடனேயே பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

பசி மயக்கத்தில் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் கவனம் கல்வியிலிருந்து சிதறுகின்றது. எப்போது இடைவேளை வரும் பாடசாலையில் தரும் சாப்பாட்டை எப்போது சாப்பிடப்போகிறோம்..? என்ற ஏக்கத்துடனேயே வகுப்பறையில் இருக்கின்றார்கள்.

உலக உணவு ஸ்தாபனத்தினால் பாடசாலையில் ஒரு மாணவனுக்கு 35 கிராம் அரிசியும் 3.54 ரூபாய் பெறுமதியான கறி வழங்குவதற்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்படுவதாக பாடசாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

மனிதனின் அடிப்படை தேவையான உணவு கூட முல்லைத்தீவு மாவட்டத்தில் சில கிராம மக்களுக்கு மூன்று வேளையும் கிடைப்பதில்லை.


உதவி செய்வதற்கு வரும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கு கிராமங்களுக்கு சென்றாலும் அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களை பார்வையிட்டு விட்டு அவர்கள் வசதிபடைத்தவர்களாகவே இருப்பதாக கருதி உதவித்திட்டங்களை வழங்காமல் வேறு நிறுவனங்களையும் வழங்குவதற்கு விடாமல் தடுக்கும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் ஒரு நாளைக்கு 5 தொடக்கம் 7 மாணவர்கள் வரை மயக்கமுற்று விழுவதாக அப் பாடசாலையின் ஆசிரியர்கள் நம்பிக்கை ஒளி செய்திப்பிரிவுக்கு தெரிவித்தனர்.

நல்லதண்ணி ஓடை, புளியமுனை ஆகிய கிராமங்களில் இருந்து காலை உணவு உண்ணாமல் சுமார் 4 தொடக்கம் ஐந்து கிலோமீற்றர் தூரம் மாணவரர்கள் நடந்தே பாடசாலைக்கு வருகின்றனர். இந் நிலையில் காலை ஒன்று கூடலில் சூரிய ஒளி பட்டவுடன் மயங்கிவிழுகின்றனர். இந்த பரிதாப நிலையைக் கண்டு இப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது பணத்தில் காலை உணவும் தண்ணீரும் கொடுத்தே வகுப்பறைக்கு அனுப்பி கல்வி கற்பிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் மாத்திரமே எமது கண்ணுக்கு புலப்பட்டிருக்கின்றது. ஆனால் இதே நிலையில் மன்னார், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இலங்கை வரைபடத்தில் கூட இன்னும் இணைக்கப்படாத பல கிராமங்கள் வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறான கிராமங்களின் தேடலை நம்பிக்கை ஒளி செய்திப்பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

இருப்பினும் எமது கண்ணுக்கு புலப்பட்ட முல்லை மாவட்டத்தில் வறிய கிராமங்களில் வசிக்கும் பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு காலையில் சத்துணவு வழங்குவதற்கு புலம் பெயர்ந்த உறவுகள் முன்வந்து உதவிக்கரம் நீட்ட வேண்டியது அவசியமாகும்.










## தனியாக இருக்கும் போது மாரடைப்பு வந்தால் உங்களை நீங்களே எப்படி காப்பாற்றிக்கொள்வது ??



மாலை மணி 6:30,வழக்கம் போல் அலுவலகப் பணிகளை முடித்து விட்டு வீட்டிற்கு தனியாக சென்று கொண்டிருக்கிறீர்கள் .

அலுவலகத்தில் வேலை பளுவின் காரணமாக, மற்றும் இதர சில பிரச்சனைகள் காரணமாக உங்கள் மனம் மிகவும் அழுத்தத்துடன் உள்ளது, நீங்கள் மிகவும் படபடப்பாகவும், தொய்வாகவும் உள்ளீர்கள் திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள்.

அந்த வலியானது மேல் கை முதல் தோள்பட்டை வரை பரவுவதை உணருகிறீர்கள். உங்கள் வீட்டில் இருந்து மருத்துவமனை ஒரு ஐந்து மைல் தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம், ஆனால் உங்களால் அந்த ஐந்து மையில் தூரத்தை கடக்க முடியாது என உங்கள் மூளை உங்களுக்கு சொல்கிறது இந்த நேரத்தில் நம் உயிரை நாமே காக்க என்ன செய்யலாம் ??

துரதிஸ்ட வசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாக இருந்திருப்பவராக உள்ளனர்! உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது.. நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள் தான் உள்ளது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது தொடர்ச்சியாக மிக ஆக்ரோசமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு முறை இரும்புவதர்க்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும் ,இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும். இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமி க்கொண்டே இருக்க வேண்டும். மூச்சை இழுத்து விடுவதினால் நுரை ஈரலுக்கு ஆச்சிஜன் சீராக செல்ல வழி வகுக்கிறது , இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக்கொண்டே இருக்க உதவும், இதனால் ரத்தஓட்டம் சீரடையும்.
இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும். பின்னர் இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்..


TAMIL SHOPPING AND ENTERTAINMENT FESTIVAL

APRIL 09th & 10th | 10:00 AM - 8:00 PM

சித்திரைத் திருவிழா விசேட விலைக் கழிவுகள்!
இரு நாட்களும் கோலாகல வர்த்தகப் பெருவிழா!!

- ஒரே கூரையின் கீழ் முதலீட்டாளர்களையும் வாடிக்கையாளர்களையும் சந்திக்கும் அரிய வாய்ப்பு
- 150 க்கும் மேற்பட்ட தமிழ் வர்த்தக நிறுவனங்கள் பங்குபற்ற உள்ளனர்
- 8000 க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்ள உள்ளனர்
- தமிழ்க் கலைஞர்கள் வழங்கும் குதூகல கொண்டாட்டம்
- விசேட மலிவு விற்பனை நடைபெற உள்ளது
- சிறுவர் கொண்டாட்ட விளையாட்டுக்கள்

www.londontamilmarket.com





Raffle Ticket for 2 Days
Sponsored by
sugun.mobi
alphatelecom.co.uk
சமகளம்
samakalam.com
£250
Tamil Diplomat
tamildiplomat.com
Voucher
£250
cartecgraphics.com

Free Gifts to Kids (10am-11am) | Free Parking | Free Transport
Between LTM Venue and Harrow-on-the Hill Station
Byron Hall, Harrow Leisure Centre, Christchurch Avenue, Harrow HA3 5BD
Tel: 0207 706 1122 , 0208 885 2933 Mob: 079 6658 0977, 079 5184 7840
Fund raised through the ticket sale goes towards supporting our Charitable Partners

# அழிந்துவரும் வாசிப்புப் பழக்கம்..!

கற்றது கையளவு கல்லாதது உலகளவு. வாசிப்பே மனிதனை பூரணமனிதனாக மாற்றுகின்றது என்று எமது முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள். இன்றைய நவீன தெழிநுட்ப வளர்ச்சியில் வாசிப்பு பழக்கம் ஈழத்திலும் சரி, புலம்பெயர்ந்த தேசங்களிலும் சரி அழிவடைந்து செல்வதை யாராலும் மறுக்க முடியாது. எமது தமிழ் மொழியின் சிறப்பம்சங்கள் அடங்கிய வரலாற்று புத்தகங்களை பொக்கிசமாக எமது முன்னோர்கள் பேணிப்பாதுகாத்து வைத்துள்ளனர். ஆனால் அவை நூலகங்களிலும், வீட்டின் அலுமாரிகளிலும் மாத்திரமே வாழ்கின்றது. புத்தகங்களை வாசிப்பவர்கள் தொகை இன்று அருகிவருகின்றது. இவற்றை மாற்றியமைக்கவேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் தலையாய கடமையாகும்.



## வாசிப்பை நேசி

இளமையில் கையாளும் வாசிப்புப் பழக்கமே கல்விக்கு அடித்தளம் என்பதை சிறார்களுக்கு உணர்த்தி, வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். வாசிப்பு என்பது மௌனமான முறையில் நிகழ்கின்ற ஓர் உரையாடல் போன்றது. வாசிப்பானது பொருள் உணர்ந்து, ஆழமாக, நிதானமாக, பரந்துபட்டு நேசித்த நூல்களை வாசிக்க வேண்டும். அப்போதுதான் அவை மனதில் ஆழமாகப் பதியும். வாசிப்பில் ஈடுபடும்போது மனிதனை மனிதனாக மாற்றக்கூடிய நூல்களை நேசித்து வாசியுங்கள். பயன் பெறுவீரகள்.

தற்போதைய சமூகம் அறிவுமையச் சமூகமாகும், சவால்கள் நிறைந்த சமூகமாகும். இவற்றுக்கு ஈடுகொடுக்க கல்விமட்டும் போதாது. வாசிப்பின் மூலம் பெற்ற அறிவும் அனுபவமும் தேவை. வாசிப்பும் கற்றலின் ஒரு பகுதி என்பதை உணர்வதுடன் வாசிப்புக்கு நேரம் ஒதுக்கி நேசித்து வாசித்து, வாசிப்பின் சுகங்களை அனுபவியுங்கள். பூரண மனிதனாக மாற்றமடைவீர்கள்.

அறிவு என்பது பிரதானமான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ள 21 ஆம் நூற்றாண்டுக்கு ஈடு கொடுத்து வாழ வாசிப்பு அவசியமானதாகும். வாசிப்பின் மூலம் பலரது பல்வேறுவகையான அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடியும். வாழ்வின் வெற்றி தோல்விகளின் சுகங்களை அறிந்து கொள்ள, பல்துறைசார் அறிவைப் பெற்றுக் கொள்ள அவை மூலம் நமது வாழ்க்கைப் போக்கில் மாறுதல்களையும், திருத்தங்களையும் ஏற்படுத்தி சீர்வாழ்வில் ஈடுபடமுடியும்.



வாசிப்பை இளமை முதல் முறையாக நேசிக்கத் தவறியமை தான் இன்றைய கலாசார சீரழிவுகளுக்கும் ஒரு காரணமாக அமைகின்றது. வாசிப்பின் மூலம் உளநலம் சீரடைவதுடன் பண்பட்ட மனிதனாக மிளிரவும் சமூகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவும், அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளவும், சமூகத்துக்கு ஏற்புடையதான மனப்பாங்குகளை விருத்தி செய்யவும், ஆளுமை விருத்திபெறவும், அறிவு வளம் பெறவும், அதன் வழி மனித நேயம் தோன்றவும், வாழ்வின் விழுமியங்களை அறிந்து கொள்ளவும் அதன் வழி வாழவும் வாசிப்பு உதவுகின்றது. எனவே வாசிப்பை நேசியுங்கள்.

சமூகத்தில் ஆரோக்கியமான விழிப்புணர்வு விதைக்கப்படவேண்டும். விரிவான சிந்திப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தனியாள் அகத் தடைகள் வெற்றி கொள்ளப்பட வேண்டும். இவை இலகுவாக வாசிப்பின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு சிறுபராயம் முதல் ஊட்ட வேண்டும். இவற்றின் மூலம் தவறான எண்ணங்கள் சீரமைக்கப்படும். எதிர்கால வாழ்வுசிறக்கும். சீரழிவற்ற சமுதாயம் தோற்றம் பெறும்.

வாசித்துக் கொண்டே இரு அப்போது உன்னால் பல கல்விமான்களதும், அனுபவசாலிகளதும் அறிவை, அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியும். அவை உனது வாழ்வுக்கு விடிவெள்ளி.

கஸ்டம் வரும்போது கண்ணை மூடாதே! அது உன்னைக் கொன்றுவிடும். கண்ணைத் திறந்துபார் நீ அதை வென்றுவிடலாமென அப்துல்கலாம் கூறினார். உழைத்துப் பிழைக்க வேண்டும். உழைப்பு நின்று விட்டால் பிழைப்புபடுத்து விடும். நுழைந்து சாதனைபுரிய மனதிலே உழைக்கும் எண்ணத்தை பதியவை எனக் கல்விமான் ஒருவர் கூறியுள்ளார். உழைப்பையும், விடா முயற்சியையும் மூலதனமாகச் செலுத்தி வாழ்வில் வெற்றி காணலாம்.

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் உலக வரலாற்றில் அழியாத இடம் பெற்றதற்கு அடிப்படைக் காரணம் அவரது இடைவிடாத உழைப்பும் விடாமுயற்சியுமாகும். இவ்வாறான நல்ல விடயங்களை வாசியுங்கள். மாறாக ஆபத்தான பாலியல் தொடர்புகள், புகைத்தல், மது, போதைப்பழக்கம் போன்ற நலவியல் விடயங்களில் அறிவை வளர்க்கக் கூடாது. ஒவ்வொரு மாணவனும் வாசிப்பை நேசிக்க வேண்டும். வாசித்தல் தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படும் காரியமாக ஆகிவிடுவது சமூகத்தின் ஒட்டு மொத்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துவிடும். ஈழத்தில் மட்டுமன்றி புலம் பெயர்ந்த தேசத்தில் வாழும் தமிழ் உறவுகள் உங்கள் பிள்ளைகளின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துங்கள். வாசிப்பே மனிதனை பூரண மனிதனாக மாற்றும்.






**உங்கள் திறமைகளை உலகத்தமிழர்களிடம் கொண்டு செல்ல நாம் தயார்.!**

**நீங்களும் தமிழ் எழுத்தாளராக ஓர் அரிய சந்தர்ப்பம்..!**

200 - 250 சொற்களுக்கு குறையாமல் சமுகம் சார்ந்த கட்டுரைகள் தற்போதைய ஈழத் தமிழ் மக்களின் அவல வாழ்வைச் சித்தரிக்கும் வகையில் எழுதி அனுப்பி வையுங்கள். தகுதியான, தரமான கட்டுரைகள் உங்கள் பெயருடன் நம்பிக்கை ஒளி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நம்பிக்கை ஒளி பத்திரிகை உங்கள் வாசல் தேடிவர ஒரு வருடத்துக்கு £25மட்டுமே.

## SUBSCRIPTION FORM

**Name:**..................................................

**Address:**..................................................

..................................................

**post code:**..................................................

**Telephone:**..................................................

மேலே உள்ள விண்ணப்ப படிவத்துடன் £25 க்கு 'Ray of hope people" பெயரில் காசோலையையும், G05, Courtenay House, 10 Courtenay Road, East Lane, Business Park,Middlesex, Wembley, HA9 7ND, UK. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நம்பிக்கை ஒளி Ray Of Hope Tel - 0044-2086179343 Mobile - 07853071088
Email - roh@theroh.org Wep - www.theroh.org

## Rey of hope Bank Details

Account Name - Ray of hope people
Account Number - 43641341
Sort code - 20-92-60
Bank Name - Barclays.

## Office Address

G05, Courtenay House, 10 Courtenay Road, East Lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK.

நம்பிக்கை ஒளி RAY OF HOPE

இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் தாயக வேலைத்திட்டங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள Ray of Hope நம்பிக்கை ஒளி Facebook பக்கத்தில் பார்வையிடுங்கள்

facebook